Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருமயம்

திருக்கோணமலை

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை

# மடாலயத் திறப்பு விழா மலர்




வில்லூன்றி


திருக்கோணமலை.

25 10 - 1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றியானே! அருள் செய்குவாயே!




திருநிறையும் திருக்கோண மலையின் கண்ணே!
திகழ் இனிய வில்லூன்றிப் பதியின் வேலா!
அருள் நிறையும் உன்னுடைய விழியைக் காட்டியே
அவனியுள்ளோர் வாழ வழி செய்வாயப்பா!
பெருகி வரும் பிரச்சினைகள் தீர நாட்டில்:
பேதமைகள் நீங்க பொதுவுடமை ஓங்க!
உருகிவரும் உனதடியார் குறையைப் போக்க
உறுதியுடன் வாழ அருள் புரிவாயப்பா!

தம்பியினைத் தமையனே! சொல்லும் காலம்
தரணியிலே உனதருளால் மாற வேண்டும்
நம்பியவர் நலமோடு வாழ வேண்டும்
நற்றமிழின் புகழ்பரந்து குலவ வேண்டும்
செம்மிய சிக்கல்கள் சூலைந்து நல்ல
செந்தமிழ் ஈழமது மலரவேண்டும்
செம்மைநிறை வில்லூன்றிப் பதியில் வாழும்
தேசிகனே! எமக்கு அருள் செய்குவாயே!

சூரர்குலம் அழித்துநல் தேவர்வாழ
சக்திவடி வேலனுய் வந்தநாதா!
தீராத துயரிலே நொந்து வாடும்
திக்கற்ற மாந்தர்கள் துயரைப் போக்கி
போரான வாழ்க்கையினை மாற்றியிந்த
புவியிலே சமத்துவ உரிமை யோங்க!
சீரான வில்லூன்றிப் பதியில் வாழும்
சுந்தர வேலா! அருள் செய்குவாயே!

- சிகண்டிதாசன் -
சித்தாண்டி



வில்லூன்றியில் எழுந்தருளியிருக்கும்
வள்ளி, தெய்வானை சமேத ஷண்முகப் பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வில்லூன்றிப்பதியுறையும்
ஷண்முகப் பெருமானுடைய அருளாலயத்தினை
ஆதாரமாகக் கொண்டு சைவசமயப்பணிகளைச் செய்து வரும்
சமயஸ்தாபனமாகிய ஸ்ரீமுருகன் தொண்டர் சபையினர்
தமது நற்பணிகளுக்கு ஒரு செயற்பாட்டு மையமாக
அமைத்த கட்டிடத்தைத் திறந்து வைக்கின்ற
இந்த நந்நாளிலே இம்மலர் இதழ்
விரிக்கிறது.

இந்த நந்நாளை என்றும்
நினைவுகூரும் வகையிலும், எமது சமய உண்மைகள்
பலவற்றை அறிந்து கொள்ள உதவும் வகையிலும்
எமது வளர்ச்சிப் பாதையின் மைல் கல்லாக அமையும்
வகையிலும் சரித்திரத்தில் பொறித்து வைக்கக் கூடிய
ஆவணமாக இந்த மலரை அச்சுவாகனமேற்றி
உங்கள் கரங்களில் பணிவோடு
சமர்ப்பிக்கிறோம்.

நீங்கள் அனைவரும்
அன்போடு இம்மலரை வாங்கிப் படித்துப்
பயன் பெறுவதோடு தொண்டர் சபையின்
நற்பணியிலும் இணைந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

வணக்கம்.

— மலர்க்குழு —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷண்முக நாயகன் தோன்றிடுவான்!

ஷண்முக நாயகன் தோன்றிடுவான் – சிவ
ஸத்குரு நாயகன் தோன்றிடுவான்
கண்களினால் கண்டு போற்றிடலாம் - கொடும்
காலத்தைக் காலனை மாற்றிடலாம்

ஏழைக் கிரங்கிடும் சித்தத்திலே – பொருள்
ஈந்து மகிழ்ந்தவர் அத்தத்திலே
ஊழைக் கடப்பவர் பக்தியிலே – தெய்வ
உண்மையைக் காண்பவர் சக்தியிலே

தேகவிசாரம் மறக்கையிலே – சிவ
ஜீவ விசாரம் பிறக் கையிலே
ஆகும் அருட்பணி செய்கையிலே – கங்கை
ஆறு கலந்திடும் பொய் கையிலே

ஆனந்த மாமலர்ச் சோலையிலே – மன
ஆட்டம் அடங்கிய வேளையிலே
ஞானம் தரும் தென்றல் காற்றினிலே – எழும்
நாம ஸங்கீர்த்தன ஊற்றினிலே

பக்குவமாம் தினைக் காட்டினிலே – அவன்
பக்தர் நுழைத்திடும் வீட்டினிலே
மிக்குயர்வாம் மலைக் கோட்டினிலே – அருள்
மேவும் அகத்தியன் பாட்டினிலே

மானுபிமானம் விடுக்கையிலே – தீப
மங்கள ஜோதி எடுக்கையிலே
ஞானானுபூதி உதிக்கையிலே – குரு
நாதனை நாடித் துதிக்கையிலே

–ஸ்ரீ பாம்பன் சுவாமிகள்
அருளிய ஷண்முக கவசம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

Sri Chandramouleeswaraya Namaha

SRI SANKARA

BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# Jagadguru Sri Sankaracharya Swamigal

Srimatam, : : Samasthanam

**KANCHEEPURAM - 631 501**

Camp: திருமலை - திருப்பதி Date: 21 - 9 - 89



கலியுகத்தில் கண்கண்ட கடவுள் முருகப்பெருமான். தமிழ் நாட்டில் ஆறு படை வீட்டில் மிக விசேஷமாக வணங்கப்படுபவர் ஸ்ரீலங்காவில் கதிர்காமத்தில் விசேஷமாக அருள்பாலிக்கிறார்.

திருக்கோணமலையில் வில்லூன்றி ஸ்ரீ முருகப்பெருமான் அனைத்து பக்தர்களுக்கும் அருள்பாலிக்கிறார்.

திருக்கோணமலையில் ஸ்ரீ முருகன் தொண்டர் சபை கட்டிடத் திறப்பு விழா செய்து சிறப்பு மலர் வெளியிடுவதை கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

மேன்மேலும் முருக பக்தியையும், முருகன்மேல் உள்ள பாடல்களை படித்தும், முருகன் அருளை அடையும்படியாய் ஆசிர்வதிக்கிறோம்.

**நாராயண ஸ்ம்ருதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முருகன் தொண்டர் சபை
### பல்லாண்டு வாழ்க!

எங்கும் வியாபகமாயிருக்கும் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாகிய சிவம், பின்னைப் புதுமைக்கும் பேர்த்து மப் பெற்றியதாய முருகப் பெருமானாக அவதரித்தார். அதனால் கலியுகவரதன் கந்தன் எனப்பட்டார். அந்தக் கந்தக் கடவுள் எழுந்தருளியிருக்கும் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலின் அருகே அமையப் பெற்ற ஸ்ரீ முருகன் தொண்டர் சபை மண்டபமும், அதனை அமைத்த தொண்டர்களும், அதனைப் புனிதமாகப் பயன்படுத்தும் அனைவரும் பல்லாண்டு வாழ்க.

ஆத்மீகப் பெரும்பணியை அடிநாதமாகக் கொண்டு நிகழும் விரதானுட்டானங்கள், அன்னதானங்கள், வித்தியாதானங்கள், அடியார்களின் உபசரணைகள், நூலகச் சிறப்புகள் பலவும் மேன்மை கொள் சைவநீதியும் ஓங்குக.

"சிவயோகசமாஜம்"
பிரதான வீதி,
திருக்கோணமலை.

சுவாமி கெங்காதரானந்தாஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் – ஆதிமுதல்வர், ஸ்தாபகர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம் – ஆதீன முதல்வர்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். இலங்கை.

சைவச் செம்மன செல்வர்களே,

திருக்கோணமலை வில்லூன்றி ஸ்ரீ முருகன் தொண்டர்சபை புதிய கட்டடத்திறப்புவிழா எடுக்கவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சி. தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே. எனவே, இந்நற்பெயர் தாங்கி இயங்கும் இச்சபை அன்பர்கள் ஆற்றிவரும் தனி, நற்பணிகளை நாம் அறிவோம். சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமென்ற உள்ளார்ந்த, உயர்மன விழைவுக்கு முதற்கண் வேண்டப்படுவது, ஒற்றுமை, அயரா ஒத்துழைப்பு, தெய்வநம்பிக்கை, பரோபகாரம் ஆதிய நற்பண்புகள். இவற்றை இச்சபையினர் கடைப்பிடித்தொழுகுவது பாராட்டுக்குரியது. வெறும் புகழ்ச்சியல்ல.

இவர்களது தொண்டுகள் மேன்மேலும் வளர்ந்து, சைவ உலகு சீரிய நலம்பெற எல்லாம்வல்ல முருகப்பெருமான் திருவடித் தாமரைகளைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

ஸ்ரீலஸ்ரீஸ்வாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

குன்றுதோறும் கோயில்கொண்ட குமரப்பெருமான் தான் உவந்து அமர்ந்த இடங்களில் ஒன்றுதான் தெக்ஷண கைலாசமென்னும் திருக்கோணேஸ்வரத் திருப்பதியைச் சார்ந்த ''வில்லூன்றி'' என்றழைக்கப்படும் கோதண்ட நியாயபுரி.

தெய்வ மணங்கமழும் இப்பெரும்பதியின் அன்பர்கள் ஒன்று சேர்ந்து நிறுவியுள்ள ஸ்ரீ முருகன் தொண்டர்சபை தமது ஆன்மீக சமூக சேவைகளை திறம்படச் செயற்படுத்தும் பெருநோக்குடன், புதிதாக நிர்மாணித்துள்ள கட்டடத் திறப்பு விழாவின் ஓர் அங்கமாக வெளியிடவிருக்கும் சிறப்பு மலருக்கு, எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்தித்து எனது நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பேருவகை கொள்கின்றேன்.

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரின் பணிகள் அனைத்தும் 'செயல்புரி ஆனல் பயனை எதிர்பாராதே' எனும் கீதை வாக்கியத்தின் வழியில் நிற்பதாகுக; மேற்படி சபையினர் மேற்கொள்ளும் பணிகள் யாவும் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி எமது முழுச் சமுதாயத்திற்கும் நல்ல முறையில் பயன்படுத்துவதாகட்டும்.

புதிய கட்டடத்திறப்பு விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் நல்ல முறையில் நடந்தேறி, ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் எதிர்காலப் பணிகளுக்கு முன்னோடிக் கருமமாக விளங்கவேண்டுமென கோணேசநாதப் பெருமானை மனதாரப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன்** — **சுவாமி ஜீவனானந்த**
இராமகிருஷ்ணபுரம்,
மட்டக்களப்பு (இலங்கை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
ஆதீனகர்த்தா
'சோ. ரவிச்சந்திரக் குருக்கள்'
அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

முருகா! முருகா! என அழைக்கும் ஆறுமுகக்கடவுள், எழுந்தருளியிருக்கும் வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில், திருக்கோணமலையில் பிரசித்த பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகிறது.

இவ் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ முருகன் தொண்டர்சபை, ஆலய வளர்ச்சிக்கும் அடியார்கள் இறைவனின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்கும் இன்றியமையாததாக விளங்குகிறது.

ஆலயங்களிலே நிகழும் நித்தியபூஜை, உற்சவதினங்களில் அடியார்கள் மடங்களில் தங்கி நாள் பூராவும் ஐம்புலன்களையும் அடக்கி பரிபூரண நிலையில் மிகவும் தூய்மையாக இறைவனை வழிபாடு செய்வதற்கு, இத்தகைய ஸ்ரீ முருகன் தொண்டர் சபை பெரும் உதவி புரியும். இதே போன்று ஏனைய ஆலயங்களிலும் இவ்வாறு மடங்கள் அமைக்க வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

எனவே, ஆலயங்களில் மடங்களை அமைப்பதற்கு இந்துக்கள் தம்மால் இயன்ற உதவிகளைப் புரிந்தும், ஆலய வீதியிலேயே குடியமர்ந்திருக்கும் அடியார்கள் அவ்விடங்களை மடங்கள் அமைப்பதற்காக மனமார்ந்து கொடுப்பதும் அவர்களின் கடமைகளில் ஒன்றாகும்.

அம்பாள் அனுக்கிரகத்தால் வெளிவரவிருக்கும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபை மலர் செவ்வனே மலர்ந்து மணம் பரப்ப எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு எய்துகிறேன்.

நன்றி.

சிவஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
(பிரதமகுரு – அறங்காவலர்)
திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை
வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் தேவஸ்தான
பிரதான சிவாசார்யரும், மட். / சிவானந்த வித்தியாலய
முன்னாள் சமஸ்கிருத - இந்துநாகரிக விரிவுரையாளருமான
வியாகரண சிரோமணி
(அண்ணாமலை சர்வகலாசாலை)

சிவஸ்ரீ பூரண . தியாகராஜக் குருக்கள்,
B. A: Hons (Cey)
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

தக்ஷிண கைலாசமெனப் புகழ்பெற்றதும், ஞானப்பாலுண்டு உலகினுக்கு ஞானமூட்டிய திருஞான சம்பந்த சுவாமிகளாலும், அருணகிரிநாத சுவாமிகளாலும் ஏத்திப் பாடப்பெற்றதும், புராண இதிகாசத் தொடர்புடையதுமான திருக்கோணமலையின் கண்ணே, பலவகைச் சிறப்புகளுமமைந்த வில்லூன்றியம் பதியினிலே கோயில் கொண்டெழுந்தருளிக் கலியுகவரதனாகக் கண்கண்ட தெய்வமாகத் திருவருள் புரிகின்றார் கந்தசுவாமியார்.

குன்றுதோறூடும் குழந்தைக் குமரனாக விளங்கும் கந்தசுவாமியாருறையும் திருப்பதிகள் பாரத நாட்டிலும், ஈழத்திலும் பலவுள. அவற்றிற்கிணையாக வில்லூன்றியம்பதியும், மிக்க புகழும் திருவருட் பொலிவும் கொண்டுவிளங்குகின்றது. இங்கு வீற்றிருக்கும் கந்தப் பெருமான் பல அற்புதங்கள் புரிந்து பக்தர்களுக்கு அருள்புரியும் பாங்கு மிக அற்புதம் வாய்ந்தது. நம் தலைமுறையிலேயே பல அன்பர்கள் கந்தனருள் பெற்றுய்ந்தமையினையும், பலருக்கு முன்பும், இப்போதும் எப்போதும் வேண்டிய காலங்களில் பலவித கோலங்களில் காட்சி கொடுத்துத் தக்கபடி திருவருள் பாலிப்பதனையும் மெய்யடியார்கள் நினைந்து நினைந்து மனமகிழ்வுகொள்வர். இத்தகைய பெருமையும் திருவருட் சிறப்பும்பற்றிக் கூறப்புகின் சொல்லிலடங்காவாம்.

நமது ஆலயத்தில் எழுந்தருளியுள்ள முருகன் ஏனைய திருக்கோயில்களிலுள்ளதுபோல், அடியார்கள் நினைத்துச் சிற்பியினால் வார்த்து உருவாக்கப்பட்ட சால்விச் செய்விக்கப்பட்ட திருவுருவமல்ல. எங்கேயோ உருவாகி, எங்கேயோவந்து, எங்கோ உறைந்து தானே மனம் விரும்பி, வில்லூன்றியம் பதியில் வந்து வீற்றிருந்து அருள்புரியும் வடிவேலன் - அதாவது; இந்தியாவில் உருவாகி இலங்கையில் திருக்கோணமலைக்கு வந்து கந்தசாமிமலைச் சாரல், தம்பலகாமம் ஆகிய இடங்களுக்குச் சென்றும் மனநிறைவுகொள்ளாமல், தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குரிய அருட்தலத்தினை விரும்பி, கனவுமூலம் பணித்து வில்லூன்றித்தலத்தில் எழுந்தருளிப் பேரருள்புரியும் அருட்குமரன், பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் கனவுகளையெல்லாம் தக்கபடி நிறைவாக்கிப் பேரருள் பாலிக்கும் பேரருளாளன்.

இங்கு வீற்றிருக்கும் ஷண்முகப் பெருமானின் திருக்கோலம் பேரழகுவாய்ந்ததுடன், பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் திருவுருவமாகும். ஆலயங்களில் மூலஸ்தானத்திலே - கருவறையினிலே கற்சிலையினாலான விக்கிரகங்களையே பிரதிஷ்டை செய்தல் விதிமுறை-மரபு. எனினும், இங்கு எம் முன்னோரும் பக்தர்களும் பலமுறை மாற்றஞ் செய்ய நினைத்த வேளைகளில் அதனைக்கனவுவாயிலாகவும், இடையூறுகள் மூலமும் தடுத்துத்தானே மூலஸ்தானத்திலே வீற்றிருந்து அருள்புரிகின்றார் ஷண்முகப்பெருமான். திருவிழாக் காலங்களிலே எம்பெருமானை மூலஸ்தானத்திலிருந்து வெளியே கொண்டுவரும் வேளைகளில் ராஜோபசாரத்துடன் எடுத்துவருதலும் விழா நிறைவெய்தியதும் ராஜமரியாதையுடன் ''பராக்கு, எச்சரிக்கை, லாலி, மங்களம் ஆகியன பாடி உள்ளே எழுந்தருளச் செய்தலும் இவ்வாலயத்துக்கு மட்டுமே உள்ள தனிப் பெருஞ்சிறப்பாகும்.

மேலும், இங்குள்ள ஷண்முகப்பெருமானின் பன்னிரு திருக்கரங்களில் ஒன்றான வலது பக்கத்து மேற்பகுதியிலுள்ள திருக்கரமானது, புதுமையான முறையில் காட்சிதருகின்றது. மேலே கையினை உயர்த்தி விரித்த நிலையில் விண்ணோர்களான தேவர்களுக்கும் அபயமளிக்கும் பாவனையில் அமைந்துள்ளது. இதுவும் இவ்வாலயத்துக்கு மட்டுமே உள்ள தனிப்பெருமையாகும். இத்தகைய கையமைப்பினைக் கொண்ட விக்கிரகத்தினை பாரத நாட்டிலும் ஓரேயொரு தலத்தில் மட்டுமே கண்டு தரிசிக்கலாம். வேறிடங்களில் காணுதல் அரிது.

கந்தன் புகழ்பாடும் கந்த புராணத்திலே விஸ்வரூபக் காட்சியிலே, எல்லையில்லாத மாயா உருவங்களைக்கொண்டு போரிடும் சூரபன்மனைக்கண்ட குமரன், சூரன் முன்னர் செய்த தவப்பலனால் அவனுக்குச் சிறிது நல்லுணர்வினையூட்டுமுகமாகத் தனது பேருருவத்தினை எடுத்தருளினார். அவ்வேளை அனந்தகோடி சூரியர்கள் ஒன்றுசேர்ந்து ஒருங்கே உதித்தாற்போன்று பேரொளியைக் காணுகின்ற ஒப்பில்லாத திருப்பெருவடிவத்தினை எடுத்தருளினார். ஆகாயத்தில் நின்று போரினைப் பார்த்துக்கொண்டிருந்த விண்ணோர்களான தேவர்கள் ''என்னவோ! ஏதோ!!'' என மனம் நடுக்கமுற்று நின்றார்கள். அப்போது கந்தசுவாமியார் கலக்கமுற்ற தேவர்களை நோக்கி ''அஞ்சாதொழிமின்! அஞ்சாதொழிமின்!!'' எனத் தனது அமைந்தகையால் (அ+பயம்) அபயமளித்தார். இத்தகைய திருக்கோலத்தில் விண்ணோர்களுக்கும் மேலேயுள்ள திருக்கரத்தினால் அபயமளித்த நிலையில் இங்குள்ள ஷண்முகப் பெருமானின் திருமேனி அமைந்துள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிகழ்ச்சியினை,

செஞ்சுடர் அனந்தகோடி செறிந்தொருங்கு உதித்ததென்ன
விஞ்சிய கதிர்கான்றுள்ள வியன் பெருவடிவை நோக்கி
நெஞ்சகம் துளங்கி விண்ணோர் நின்றனர் விமலமூர்த்தி
அஞ்சன்மின் அஞ்சன்மின் என்று அருளினன் அமைந்த கையால்
(விஸ்வருபக் காட்சி - கந்தபுராணம்)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

இவ்வாறு பாரத நாட்டிலும், ஈழத்திலும் காணுதற்கரிய சிறந்த வடிவமைப்பினைக்கொண்ட, வள்ளி தேவசேனா சமேத ஷண்முகப் பெருமானின் ஆலய வீதியிலே அமைந்திருந்த சீரணமடைந்துபோன பழைய மடம் இருந்த இடத்திலே, பற்பல நற்பணிகளை ஆடம்பரமும் சுயநல நோக்குமின்றி, அமைதியான முறையினிலே பாடுபட்டுத் திருத்தொண்டு புரியும் பக்தர்களைக் கொண்டு, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பர் சுவாமிகளின் திருவாக்கிற்கிணங்கத் தொண்டு செய்யும் நோக்குடன் அமைக்கப்பட்ட, 'ஸ்ரீ முருகன் தொண்டர்சபை'யினரின் அயராத — தளராத முயற்சியினாலும், வெளிநாட்டிலும் உள்நாட்டிலுமுள்ள பல அன்பர்களின், நலன் விரும்பிகளின் உதவியினாலும் ஓர் அழகிய கட்டடமானது. அடியார்கள் விழா, விரத காலங்களில் தங்கி எம்பெருமானைத் தரிசிக்க வசதியாக அமைக்கப்பட்டு முருகன் திருவருளினாலே நிறைவுற்றுள்ளது. இதன் திறப்புவிழா நிகழவிருப்பதனையறிந்தும், இதுகாலவரை நிலவிய சிறுகுறை நிவர்த்தியானதைப் பார்த்தும் பெருமகிழ்வெய்துகின்றோம். சமயப்பணி, சமயவகுப்பு போன்ற பல சிவ நற்பணிகளுக்கே இதனைப்பயன்படுத்தவேண்டும் என்பதே நம்வேணவா.

இத் திருப்பணியில் காலச்சூழ்நிலை, நாட்டுநிலை ஆகிய எல்லாவற்றையும் பொருட்படுத்தாது விரைவில் கட்டடம் நிறைவுபெற குறுகிய நோக்கின்றி அரும்பாடுபட்ட 'ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரும்' பொருளுதவி, சரீர ஒத்தாசை முதலானவற்றை நல்கிப் பங்குகொண்டுழைத்த அன்பர்கள், அடியார்கள் அனைவரும் ஆறுதலைக்கொண்ட பரமனின் அருட்குமரனும், கலியுகவரதனும், எங்கள் குலதெய்வமும், ஆறுதலைப்பெருமானுமான வள்ளி தேவசேனா சமேத ஷண்முகப்பெருமானின் திருவருளினாலே, சகல நலன்களும் பெற்றுப் பூரணமான ஆனந்த வாழ்வுபெற வில்லூன்றிக் கந்தன் திருவருள்புரிவானாக என, ஆறுமுகனின் பாதகமலங்களை உள்ளக் கமலத்திலிருத்திப் பிரார்த்தித்து, ஆலய நிர்வாகஸ்தர்களான நமது பரம்பரைச் சிவாசார்யார்கள் அனைவரினதும் சார்பில் எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

**"தொண்டர் தம் பெருமை சொல்லவும் எளிதோ"**
**தொண்டர் சபையினரின் தொண்டு மேன்மேலும் வளர்க!**
**"ஸர்வே ஜ நா: சுகிநோ பவந்து"**
**மக்களனைவரும் இன்புற்று வாழ்க.**

**பூரண. தியாகராஜக் குருக்கள்.**

ராஜ் கமல்,
வேலூர், கல்லடி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை
வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில் தேவஸ்தான குருவும்
புனித வளனார் வித்தியாலய இசையாசிரியருமான

# பிரம்மஸ்ரீ பூரண சுந்தரேஸ்வர ஐயர் அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

உலகப் பிரசித்தி பெற்ற திருமலைத் துறைமுகத்துக்குச் சமீபமாகச் சுங்க வீதியில் அமைந்துள்ளது இவ்வாலயம். இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் பாரதநாட்டில் திருவேரகம் என்னும் மகா தலத்தில் பிரசித்தி பெற்ற, குமாரநாதச் சிற்பியினால் பஞ்சலோகத்தினால் ஆக்கப்பட்ட ஸ்ரீ ஷண்முகர், வள்ளி தெய்வானையுடன் மயில்மீதமர்ந்து அருள்பாலிக்கிறார். மகா மண்டபத்தில் தெற்கே பார்த்த வண்ணம் விநாயகர், சக்தி சமேதராக ஆறுமுகசாமி, முத்துக்குமார சுவாமி, தண்டாயுதபாணி, ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் முதலிய திருவுருவங்கள் இருக்கின்றன. ஸ்னபன மண்டபத்தில் சிவலிங்கப் பெருமானுக்கும், அம்பாளுக்கும் தனித்தனியே ஆலயங்கள் உண்டு. ஸ்தம்ப மண்டபத்தில் மயூரமும், பலிபீடமும், வெளிமண்டப வாசலில் சாளக்கிராமமும், மணிக்கோபுரமும் உண்டு. உள்வீதியில் விநாயகர், தண்டாயுதபாணி, நாகேஸ்வரர், நவக்கிரகங்கள், வைரவர், சூரியன் முதலிய பரிவாரமூர்த்தங்களும் உள்ளன.

ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு முன்வரும் பௌர்ணமியில் கொடியேற்றப்பட்டு பதினைந்து நாட்களுக்கு மகோற்சவமும், பூங்காவனமும், தெற்போற்சவமும் நடைபெறுகின்றது. ஷண்முகப் பெருமான் இலங்கைக்கு வந்து சேர்ந்த முடமாண்டாள் கடற்கரையிலேயே இன்றும் சமுத்திரத் தீர்த்தமாடச் செல்வார். வெளியூர், உள்ளூர் அடியார்கள் இவ்வாலயத்தில் தங்கியிருந்து கந்த சஷ்டி விரதம் அனுட்டிப்பார்கள்.

தைப்பூசம், சிவராத்திரி, வைகாசி விசாகம், திருக்கார்த்திகை, நவராத்திரி, திருவெம்பாவை என்பன விசேட அலங்கார விழாக்களாக நடைபெறுகின்றன. இவ்வாலயத்துக்குப் புதிய சித்திரத்தேரும் அமைக்கப்பட்டுள்ளது.

கந்தசஷ்டி முதலிய விரதகாலங்களிலும், திருவிழாக்காலங்களிலும் சிறிது நேரமாயினும் களைப்பாற, இளைப்பாறித் தங்க ஓரிடம் இல்லாத குறை நீண்டகாலமாக நிலவி வந்தது. கந்தனுக்குத் திருத்தொண்டு புரிவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு உருவாக்

கப்பட்ட ''ஸ்ரீமுருகன் தொண்டர் சபை'' யினரின் நன் முயற்சியி ஞலும், நலன் விரும்பிகளான அடியார்கள், அன்பர்களின் பலவிதமான உதவிகளிஞலும் ஓர் அழகிய கட்டடம் கட்டி, தற்காலிகமாக நான் ஆலயகுரு — நிர்வாகஸ்த பொறுப்பினை (மகன் ஸ்ரீ சிவ. சுரானந்தேஸ் வரர் சர்மாவின் சார்பில்) ஏற்றுப் பணிபுரியும் காலத்திலேயே நிறைவு பெற்றுத் திறப்புவிழா நிகழவிருப்பதனை எண்ணிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்தகைய சிறந்த பணியில் அயராதுழைத்துப் இப்பெரும் புனித கைங்காரியத்தினைப் பூர்த்தி செய்த ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரும், பொருளுதவி போன்ற பலவழிகளில் பங்கு கொண்ட பக்தர்கள், அன்பர்கள் அனைவரும் தேவகுஞ்சரி மணுளனும், வள்ளி காந்தனுமான ஷண்முகப் பெருமானின் கந்தசுவாமியாரின் திருவருளி ஞலேசகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ்வில்லூன்றிக் கந்தன் அருள்புரிவாஞக எனப் பிரார்த்தனை செய்து எனது உளம் கனிந்த நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**தொண்டர் சபையினரின் பணி வளர்ந்து சிறக்க**
**என் நல்வாழ்த்துக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றிக் கந்தசுவாமி தேவஸ்தான
பிரதம குருவும், நிர்வாகஸ்தருமான
பிரம்மஸ்ரீ சிவ சுரானந்தேஸ்வர சர்மா
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட நமது சைவ சமயம் மிகவும் தொன்மையானது. சிவபிரானின் குமாரராகிய முருகக் கடவுளின் வழிபாடு நம்நாட்டில் பிரசித்தமானது. கலியுகவரதன் என்று போற்றப்படுவன் கந்தன்.

முருகன் தம்மிலிருந்து வேறுபட்டவனல்லன் என்று பரமசிவனே கூறுவதாகக் கந்தபுராணம் உரைக்கிறது. இத்தகைய பெருமை வாய்ந்த முருகப் பெருமான் தஷ்ண கைலாசமென்று போற்றப்படும் திருக்கோணமலையிலே வில்லூன்றிப்பதியிலே வள்ளி, தேவசேனை சமேதராக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

குரு, லிங்க, சங்கமமென்று சொல்லப்படும் மூவகை வழிபாடு சைவத்தில் சொல்லப்படுகிறது. அவ்வகையில் இங்கு வரும் திருவடியார்களுக்கு (சங்கமம்) உதவும் வகையில் ஒரு மடமும் சைவசமய அபிவிருத்திப் பணிகளுக்கு உதவும் வகையில் ஒரு அலுவலகமும் இணைந்து கட்டடம் ஒன்றை இவ்வாலய வீதியில் அமைத்து, இன்று அதனைத் திறந்து வைக்கிறார்கள் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர்.

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் நீண்ட காலமாக வில்லூன்றிக் கந்தன் தேவஸ்தானத்தை மையமாகக் கொண்டு திருக்கோணமலையில் விரிவான சமயப்பணி புரிந்து வருபவர்கள். அவர்களது நற்பணிகளின் சிகரமே இன்றைய திறப்புவிழா.

இவ்விழா சிறப்புற நடக்கவும், திறப்புவிழாவையொட்டி வெளியிடப்படும் மலர் சிறப்புற, மலரவும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரும், முருகன் அடியார்களும் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழவும் எல்லாம் வல்ல முருகப்பெருமானின் திருவடிகளை வழுத்தி எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

— ஸ்ரீ சிவ சுரானந்தேஸ்வர சர்மா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்

மணியகாரர் - தலைவர், பரிபாலன சபை

# அ. சுப்பிரமணியம்

அவர்களின்

# வாழ்த்துரை

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையால் தற்போது நிர்மாணிக்கப்படும் கட்டிட நிலத்தில் சில காலத்துக்கு முன்னர் ஒரு மடம் இருந்தது. வில்லூன்றிக் கந்தனைத் தரிசிக்க வரும் பக்தர்கள் முக்கியமாகக் கந்தசஷ்டி விரதத்தை ஆலயத்தில் இருந்து கொண்டே அனுஷ்டிக்க விரும்பிய பக்தர்களுக்கு இம் மடம் பெரும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. ஆனால் காலக்கிரமத்தில் பழுதடைந்த நிலையிலிருந்த அம் மடக்கட்டிடத்தைப் பார்ப்பது வேதனைக்குரியதாக இருந்தது. வில்லூன்றிக் கந்தனின் தொண்டிற்கு அயராது உழைத்து வரும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் அந்தப் பாழடைந்த கட்டிடத்தைப் பொறுப்பேற்றுப் புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணித்துப் பரந்தளவில் பயனுள்ள தொண்டுகளைச் செய்ய முன்வந்து உள்ளனர். இது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

முருகன்புகழ் ஓங்கட்டும். அவன் நல்லருள் எங்கும் பிரகாசிக்கட்டும். அடியார்க்கும் அடியார்கள் தொண்டு மேலும் மேலும் வளரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை

வில்லூன்றிக் கந்தசாமி கோயிலைச் சேர்ந்த

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை மடம் திறப்புவிழாவிற்கு

கோயில் நிர்வாகஸ்தர்

## ஞா. கதிர்காமதாசன்

அவர்களின்

# வாழ்த்துரை

திருமலை வில்லூன்றியம்பதியில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்புரியும் வள்ளிதேவயானை சமேத முருகப் பெருமானுக்குத் தொண்டு செய்யும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் பல வருடங்களாகக் கோயிலுக்குப் பல தொண்டுகளைச் செய்து வருகிறார்கள். பல காலமாகக் கோயிலுக்கு ஒரு மடம் இல்லாத குறையை அச்சபையினர் தங்களின் பெரு முயற்சியினாலும் மக்களின் ஒத்துழைப்பினாலும் முருகப்பெருமானின் திருவருளினாலும் ஒரு மடத்தைக் கட்டி அதைப் பூர்த்தி செய்யும் நிலையிலும் உள்ளார்கள். அம்மடத்தின் திறப்பு விழா நடைபெறுவதை முன்னிட்டு அதற்காக உழைத்த ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினருக்கு எனது மனப்பூர்வமான நல்லாசிகள் உரித்தாகுக.

✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

# மணங்கமழ மலர்வதாக!

வில்லூன்றி வேல் முருகன் கோணமலை தொண்டர் சபை
கல்லூன்றியக் கட்டிடத் திறப்பு விழா! நல்
'மலர்' மணங்கமழ மலர்வதாக! மால் மருகன்!
இலங்கை இருளகற்றி ஒளிர்வதாக!

காஞ்சிபுரம்.
*29 - 09 - 89*

**கவிஞர் கலாநிதி மா. வரதராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குகமயம்

# வில்லூன்றிக் கந்தசுவாமி கோயில்

மூல மூர்த்தம் : ஸ்ரீ சண்முகப் பெருமான்.

தலம் : திருக்கோணமலை வில்லூன்றி.

தீர்த்தம் : முடமாண்டான் கடற்கரை.

## பரிவார மூர்த்தங்கள்

விநாயகர்

சிவலிங்கப் பெருமான்

மீனாட்சி அம்மன்

தண்டபாணி

நவக்கிரக நாயகர்கள்

கொடித்தம்பப் பிள்ளையார்

நாகேஸ்வரர்

பைரவர்

சண்டேஸ்வரர்

சூரிய பகவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் நிர்வாக சபை

| | | |
|---|---|---|
| காப்பாளர்கள் | : | திரு. அ. சுப்பிரமணியம் |
| | | பிரம்மஸ்ரீ.சிவ. சுரானந்தேஸ்வர சர்மா |
| | | திரு. ஞா. கதிர்காமதாசன் |
| | | திரு. அ. சிவலோகநாதன் |
| | | திரு. ஆர். இரங்கவடிவேல் |
| தலைவர் | : | திரு. வி. சிவஞானம் |
| உப தலைவர்கள் | : | திரு. நா. சி. சிவசுப்பிரமணியம் |
| | | திரு. எஸ். சிவேந்திரன் |
| செயலாளர் | : | திரு. ந. செல்வஜோதி |
| உப செயலாளர் | : | திரு. ஏ. குகப்பிரியா |
| பொருளாளர் | : | திரு. பொ. பத்மநாதன் |
| உப பொருளாளர் | : | திரு சு. முருகையா |
| உறுப்பினர்கள் | : | திரு. வ. கனகசபாபதி |
| | | திரு. இ. வேலாயுதம் |
| | | திரு. நா. சுப்பிரமணியம் |
| | | திரு. ஜீ. சண்முகநாதன் |
| | | திரு. ஆ. ஆ. ஜெயரட்ணம் |
| | | திரு. க. தங்கமயில் |
| | | திரு. கே. சின்னப்பு |
| | | திரு. க. கனகரெத்தினம் |
| கணக்குப் பரிசோதகர் | : | திரு. து. சண்முகநாதன் |

## மலர்க்குழு

திரு. ஆ. ஆ. ஜெயரட்ணம் (தலைவர்)
திரு. ந. செல்வஜோதி (செயலாளர்)
திரு. பொ. பத்மநாதன்
திரு. சு. முருகையா
திரு. ஏ. குகப்பிரியா
திரு. ஜீ. சண்முகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் சபையே வாழியவே!

—கவிஞர்: பாரதிபாலன்—

1. தெட்செண கைலாயத் திருமலை வாழி - ஸ்ரீ
முருகன் தொண்டர்
சபையிங்கு வாழி.

2. நன்னெறி ஊட்டி
நற்பணி ஆற்றி
நம்பதி வாழ
உழைத்தவராம் - ஸ்ரீ
முருகன் தொண்டர்
சபையின ராலே
சைவமும் தமிழும்
தழைத்தன வாம். (தெட்செண)

3. தொண்டர் குலமே
தொழுகுல மென்பர்
தொழுவோம் வாரீர்
அடியவர் காள்! - இவர்
மாதுமை கோணை
மலையரை அழைத்தே
தெருத்தெரு வாக
வந்தவராம் - அன்று
ஊர்வல ஒளியாய்
நின்றவராம். (தெட்செண)

4. ஆன்ம சுடேற்றும்
அருள்கொடித் தம்பம்
கோணமா மலைமேல்
நிறுவினராம் - இவர்
கோடையின் மழையாய்
குவலயம் போற்றும்
கொள்கையர் தொண்டர்
சபையினராம் (தெட்செண)

5. உடலுக்கு உறுதி
உறுதிக்கு உணவு
உணவுக்கு தானம்
அன்னதானம் - இந்த
உளத்துக்கு ஞானமும்
ஊட்டிடும் பணியால்
உலகம் போற்றும்
சந்நிதானம் - இது
உலகம் போற்றும்
சந்நிதானம். (தெட்செண)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் கருத்துரை

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னை
பாலனென்றிருந்தேன் அந்நாள் பரிதலை உணர்கிலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும்
மூல காரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தி அன்றோ.

எல்லாம் வல்ல இறைவன் கலியுகவரதனும் ஷண்முகப் பெருமான் வில்லூன்றியம்பதியில் கோயில்கொண்டு எழுந்தருளி இருப்பது யாவரும் அறிந்ததாகும். 1948 ஆம் ஆண்டு வில்லூன்றி முருகன் சந்நிதானத்தில் வடக்கு வீதியில் வசிப்பதற்கு எனக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்றுதொட்டு முருகனுக்கு தொண்டு செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. அந்நாட்களில் திருவாளர்கள் ஏகாம்பரம், சின்னப்பு, வ. கனகசபாபதி, நா. சி. சுப்பிரமணியம் இன்னும் சில தொண்டர்களும் முருகனுக்கு தொண்டு செய்வதில் ஈடுபட்டு இருந்தோம்.

எல்லோர் மனதிலும் தனித்தனியாக தொண்டு செய்வதிலும் பார்க்க ஒன்றுகூடி ஓர் சபை அமைத்து அச்சபையின் கட்டுக்கோப்பில் இருந்து தொண்டாற்றுவது உசிதமெனத் தோன்றியது. அதன்படி 1952 ஆம் ஆண்டு ஆலய பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமாகிய, பிரம்ம ஸ்ரீ பூர்ணானந்தேஸ்வர குருக்கள் அவர்களிடம் விண்ணப்பித்தோம். அப்பெரியார் எங்கள் தொண்டினை அறிந்தமையால் ஆசீர்வாதம் செய்து சபைக்கு ''ஸ்ரீ முருகன் தொண்டர் சபை'' என்ற நாமத்தைச் சூட்டும்படியும் சந்நிதானத்தின் முன் மண்டபத்தில் கூடும்படியும் பூர்ண சம்மதம் தெரிவித்தார். அன்றிலிருந்து இற்றைவரை எமக்கென ஓர் கட்டிட வசதியின்மையால் கோயில் மண்டபத்திலேயே சபைக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன.

இக்கஷ்டங்களை எல்லாம் அவதானித்த ஆலய தர்மகர்த்தாக்கள் மனமுவந்து எமது விண்ணப்பத்தின் படி ஓர் காணித்துண்டை தெற்கு வீதியில் தந்து உதவினார்கள். அதில் தற்போது நிர்மாணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட கட்டிடம் முருக பக்தர்களுடைய உதவியினாலும் எனது சபை உறுப்பினர்களின் அயராத விடாமுயற்சியினாலும் எம்பெருமானது கருணையினாலும் கட்டிட வேலை பூர்த்தியாகி உள்ளது.

முருகனுக்கு தொண்டு செய்யவென தொடங்கிய சபைக்கு சாலப்போக்கில் அநேக சிவத்தொண்டுகள் செய்யக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. அவற்றையும் செவ்வனே செய்துமுடித்தும் தற்போதும் சில தொண்டுகளைச் செய்துகொண்டுவருகின்றோம். இந்நூலை வாசித்தால் முழு விபரங்களையும் அறிவீர்கள்.

இந்துப் பெருமக்கள் இக்கட்டிடத்தைப் பாதுகாத்து பேணி இறைவனின் சேவைக்கு பயன்படுத்துமாறு வேண்டிக்கொள்கின்றேன். இப்பெரும்பணிக்கு நிதி உதவி அளித்தவர்கள், சரீர உழைப்பு அளித்தவர்கள், ஆலோசனை தந்து உதவியவர்கள் அனைவருக்கும் எனது மேலான நன்றியறிதலையும் சமர்ப்பிக்கின்றேன். இக்கட்டிடம் சம்பந்தமான வரவுசெலவுக் கணக்கு விபரங்களை எமது சபை விரைவில் பொதுமக்களுக்கு சமர்ப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வணக்கம்

**வி. சிவஞானம்**
தலைவர்

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் கருத்துரை

1952 ஆம் ஆண்டு ஸ்ரீ முருகன் தொண்டர் சபை அமைக்கப் பட்டது. நிர்வாக சபையின் முக்கிய உறுப்பினர்களாக தலைவர் திரு. பொ. இரத்தினசிங்கம், செயலாளர் திரு. வே. ஏகாம்பரம், பொருளாளர் திரு. பொ. பத்மநாதன் நியமிக்கப்பட்டனர். ஆலயத் திருப்பணிகள், சமய போதனைகள், சிரமதான வேலை போன்றவற்றை முன்னின்று நடாத்திவந்தது. காலத்தின் கோலத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களினால் இவற்றைத் தொடர்ந்து நடத்தமுடியாமல் போய்விட்டது. எமது சபைக்கு நிரந்தரமான கட்டிடம் இல்லை. முருகப் பெருமானுடைய கந்தசஷ்டி அன்னதானம் கொடுப்பதற்கு ஒரு மடமும் இல்லை. கலியுகவரதனாகிய முருகப்பெருமானின் திருவருளால் எங்கள் சபைக்கு அலுவலகமும், யாத்திரிகர் தங்குவதற்கும், அன்னதானம் கொடுப்பதற்கும் வசதியாக ஒரு மடமும் அமைப்பதற்கு மணியகாரர்கள் எமக்கு ஆலய வீதியில் இடம் தந்து உதவிபுரிந்தார்கள். அவர்களுக்கு எமது சபையின் சார்பில் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். உங்கள் கண்பார்வைக்கு அமைந்துள்ள மடத்தையும் எமது அலுவலகத்தையும் அமைப்பதற்கு எமது அங்கத்தினர்களும் பிரதான உறுப்பினர்களும் உங்களை நாடிவந்த பொழுது இன்முகத்துடன் நீங்கள் அளித்த சிறுதுளி பெருதுளியாகி இப்புதிய கட்டிடத்தை இந்துப் பெருமக்களுக்குத் தந்துள்ளது. இக் கைங்காரியம் சிறப்புற நடைபெற ஒத்துழைத்த அங்கத்தவர்களுக்கும், நிர்வாக சபையினருக்கும், பொதுமக்கள், பெரியோர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொ. பத்மநாதன்
பொருளாளர்

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றித் தல வரலாறு

தெட்ஷண கைலாசம், திருகோணசலம் என்று பிரசித்தி பெற்று, திருஞானசம்பந்த சுவாமிகளால் 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை' என்ற தேவாரப் பதிகம் பாடப் பெற்ற ஸ்தலத்தில், 'வில்லூன்றி' எனவும் 'கோதண்ட நியாசபுரி' எனவும் சிறப்புப் பெயரைத் தாங்கிய, வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஸ்தலத்தில், கோயில் கொண்டருளிய ஸ்ரீ வள்ளி, தேவயானை சமேதராகக் கந்தப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலித்து வருகின்றார்.

பாரத புண்ணிய பூமியில் 'திருவேரகம்', முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று. அங்கு, சிவசுப்பிரமணிய சர்மா என்பவர் பூசிப்பதற்காகக் குமாரநாத சிற்பியால் பஞ்சலோகத்தினால் கருவில் உருவாக்கப்பட்ட சண்முகப் பெருமான் தமது அருட் கருணையினால், சிவசுப்பிரமணிய சர்மாவிற்கு சாயுட்ச பதவியை அருளினார். இதனால், சிவசுப்பிரமணிய சர்மாவின் சுற்றத்தார் கலக்கமுற்றனர். இத் திருவுருவத்தைச் சிதைத்துவிட எண்ணினர். எம்பெருமான் தனக்கென்றொரு ஸ்தானத்தை நிர்ணயித்தவர் போலும். சிற்பியின் கனவில் தோன்றி, தம்மைப் பேழையுள் வைத்து, ஈழத்திற்குச் செல்லும் கப்பலில் அனுப்பி விடு என்று திருவாய் மலர்ந்தருளினார். சிற்பியும் தமது கடமையை நிறைவேற்றினார். ஈழத்தின் கிழக்குக் கரையில் வந்துகொண்டிருந்த பாய்க்கப்பல் கோணேஸ்வரத்திற்கு நேரே வந்த போது அசையாது நின்று விட்டது. பஞ்சபூதங்களையும் ஆட்டுவிக்கும் எம்பெருமான் காற்றை நிறுத்திவிட்டார். கப்பலும் அசையவில்லை. சரவணப் பொய்கையில் அவதரித்த ஷண்முகர் சமுத்திரத்தில் இறங்க நினைத்தார் போலும். எம்பிரான் மாலுமியின் சொப்பனத்தில் தோன்றி, கப்பலினுள் தாம் அமர்ந்திருக்கும் பேழையைக் கடலில் விட்டால் கப்பல் நகரும் என்று அருளினார். மீகாமனும் அப்படியே செய்தார். கப்பலும் நகர்ந்தது.

திருக்கோணமலைக் கந்தமலைச்சாரலிலே, மனையாவெளிக் கடற்கரைப் பகுதியில் வசித்த கரையூரார் இப்பேழையைக் கண்டெடுத்தனர். கந்தமலைச் சாரலில் சிறு ஆலயம் அமைத்துக் கந்தப்பெருமானை முப்பது வருடங்கள் வழிபட்டு வந்தனர்.

அன்னியர் இலங்கைக்கு வந்து ஆண்ட காலத்தில் அவர்களின் கலகங்களால் இருபத்திரண்டு வருடங்கள் தம்பலகமத்தில் எழுந்தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தார். திருவேரகத்தில் நிலையாக இருக்க விரும்பாத எம் கந்தப் பெருமான், அக் காலத்தில்வாழ்ந்த வைரவநாதக் குருக்களின் சுற்றத் தாராகிய விசுவநாதப்பட்டரும், வேலப்பமணியமும், கதிர வேலு முதலியாரும் 1809 ம் ஆண்டில் வில்லூன்றியம்பதியில் அமைத்த ஆலயத்தில், ஸ்ரீவள்ளி தெய்வானை சமேதராக நிலையாக வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்மாரி பொழியத் தொடங்கினர்.

இத்தகைய பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த வில்லூன்றிக் கந்தசுவாமியாருக்குக் காலக்கிரமத்தில் ஆகமசாஸ்திர விதிப்படி ஆலயம் அமைத்து மகோற்சவம் முதலான ஏனைய சகல விசேடங்களும் நடைபெற்று வருகின்றன.

# வேண்டுகோள்!

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் இந்து சமய நூலகமொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் அன்பர்கள் யாவரும் தம்மாலியன்ற வகையில் இந்து சமயத் தொடர்புடைய நூல்களை இந்நூலகத்துக்கு அன்பளிப்புச்செய்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறார்கள்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடாலயங்கள்

சைவப்புலவர், பண்டிதர், இ. வடிவேல்

கோயில்கள் பலவகைப்படும். அவைகள் விமானங்களின் அமைப்பைக் கொண்டு பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக் கோயில், திருக்கோயில் என்று வகைப்படுத்தப்படுகின்றன. 'பெருக் காறு சடைக்கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில்' என்று தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இந்தக் கோயில் வகை களைக் குறிப்பிடுகின்றார். கோ - ஒப்பாரும் மிக்காரும் அற்ற இறை வன். இல் - உறையுமிடம். எனவே கோயில் என்பது இறைவன் உறையும் இடம். இதனை ஆலயம் என்றும் கூறுவர். ஆ - ஆன்மா; லயம் - சங்கமித்தல். எனவே ஆலயம் என்பது ஆன்மா இறைவனு டன் சங்கமிக்கும் இடமாகும்.

ஆலயங்களில் மடாலயம் என்பதொன்றுண்டு. இதுதான் ஆதி காலத்தில் இறைவனை எழுந்தருளச்செய்து வழிபாடு நிகழ்த்தப்பட்ட கோயில். சிற்ப சாஸ்திரங்களின் வண்ணங்களைச் சொரிந்து கோபுரம், தூபி என்பன பொருந்த அமைக்கப்படும் கற்கோயில்கள் தோன்று வதற்குமுன் மடாலயங்கள்தான் இருந்தன. மடங்கள் ஆலயமாக்கப் பட்டபோதுதான் மடாலயங்கள் தோன்றின. இதிலிருந்து ஒன்று தோன்றுகிறது. இறைவனுக்குக் கோயில் கட்டுவதற்குமுன் ஆதி காலத்தில் புத்திஜீவிகளின் உறைவிடமாக மக்கள் மடங்களைக் கட்டி இருக்கிறார்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட மடங்களில் ஞானிகளும், பக்தர்களும், அடியார்களும் கூடி இறைவனுடைய அளப்பரும் தெய் வீக சக்தியையும், பேராற்றலையும், திருவருட் செயல்களையும் சிந் தித்துச் செயற்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையிலும் செயலிலும் இருந்து சாஸ்திரங்களும், தோத்திரங்களும், புராண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகாசங்களும் தோன்றின. இவைகள் தோன்றுவதற்கு இடமாயிருந்தது மடம். இத்தகைய மடத்தில் இறைவனுடைய திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கியபோதுதான் மடாலயங்கள் தோன்றின.

மனிதனுடைய நாகரீக வளர்ச்சியில் இந்த மடாலயங்கள் கொடுமுடிக் கோபுரங்களைக் கொண்ட பெருங் கற்கோயில்களாகப் பரிணமித்த போதிலும் அதற்கருகே மடங்களையும் கட்டும் வழக்கம் தொடர்ந்தும் இருந்து வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள பெருங்கோயில்களுக்கு அருகே அழகான மடங்களும், கல்யாண மண்டபங்களும், திருமுறை ஓதும் மண்டபங்களும், புராணபடனம் நிகழ்த்தும் மண்டபங்களும் சிற்பசாஸ்திர முறைப்படி அமைந்திருப்பதைக் காணலாம்.

ஈழநாட்டிலும் சில கோயில்களுக்கருகே மடங்கள் முதலானவற்றை அமைத்திருப்பதை அறிவீர்கள். ஆலயங்களினதும், மக்களினதும் தேவைக்கேற்ப மடங்களை அமைப்பது மாபெரும் தர்மமாகும். வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிலுக்கருகே ஒரு மடம் இருந்து அழிந்துவிட்டது. நமது முன்னோர் நிறுவிய தர்மத்தை அழியவிட்டுப் பாராமுகமாயிருப்பது தர்மமாகாது. ஸ்ரீ முருகன் தொண்டர் சபையால் இந்த மாபெரும் கைங்கரியத்தை மேற்கொண்டு முன்னெடுத்துச் செயற்படத் துணிந்தமை வில்லூன்றிக் கந்தனின் திருவருட் செயலாகும். ஒரு காரியத்தால் பல நோக்கங்களை நிறைவேற்ற எண்ணியுள்ள ஸ்ரீ முருகன் தொண்டர் சபையார், இந்த மடத்தை கந்தசஷ்டி விரதகாலங்களில் அன்னதானமடமாகவும், அடியார்கள் தங்குமிடமாகவும், ஏனைய காலங்களில் சமய வகுப்புக்கள் நடத்தவும், கல்யாண மண்டபமாகவும், நூல்நிலையமாகவும் பயன்படுத்தலாமெனக் கருதுவதும் போற்றத்தக்கதே. வரலாற்றுச் சிறப்பு மிக்க வில்லூன்றிக் கந்தன் ஆலயம் சிறப்படையவும் மக்கள் பல நலங்களை அடையவும் கட்டிடத் திறப்பு மலரை வெளியிடும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையாரின் நோக்கம் நிறைவேறவும் கந்தன் கருணை புரிவாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் தலைவர்

# பார்வையில்.....

ஸ்ரீ முருகன் தொண்டர் சபை உருவாகி 35 ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ்வாண்டில் இச்சபையால் நிர்மாணிக்கப்படும் 'முருகன் இல்லம்' என்னும் பெயர் கொண்ட மண்டபத் திறப்பு விழாவின் போது ஒரு மலர் வெளியிடும் நோக்கமாக இச்சபையின் ஆரம்ப செயலாளராகிய யான் தற்போதைய செயற்குழுவினரது வேண்டுகோளுக்கு இணங்க இச்சபையால் நடாத்தப்பட்ட சில கைங்கரியங்களை இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

1952 ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்ரீ முருகன் தொண்டர் சபை சைவத்திற்கும் சமூகத்திற்கும் அரும்பெரும் பணி ஆற்றிக்கொண்டு வருவது மக்கள் அறிந்ததே.

ஆரம்பத்தில் இச் சபையை உருவாக்கி உடனுழைத்து அயராது செயல்பட்ட சில அங்கத்தவர்களை இங்கே குறிப்பிடுவது மிகையாகாது. திருவாளர்கள் பொ. இரத்தினசிங்கம், நா. சி. சிவசுப்பிரமணியம், து. சண்முகநாதன், இ. முத்துராசா, செ. பூபாலபிள்ளை, பொ. பத்மநாதன், வி. சிவஞானம், இ. மகாலிங்கம், K. சின்னப்பு சோ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர். சமய வளர்ச்சி, சமூக சேவை இவ்விரண்டுமே முக்கிய பணியாகக் கொண்ட இச்சபை விசேடமாகத் திரு. வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் உற்சவ காலங்களில் குறிப்பாக கந்தசஷ்டி தினங்களில் உபந்நியாசங்கள், கூட்டுப் பிரார்த்தனைகள் நடாத்தி வந்தது யாவரும் அறிந்ததே. காலஞ்சென்ற சிவானந்த சரஸ்வதி மாதாஜி அவர்கள், தபோவனத்தில் நிலைகொண்டு கீழ் மாகாணத்திலும், மற்றும் மாகாணங்களிலும் அயராது செயல் புரிந்த சச்சிதானந்த யோகி அவர்கள், திருவாளர்கள். ச. ஜெயச்சந்திரன், பொ. கந்தையா ஆசிரியர் (காந்தி மாஸ்டர்), பண்டிதர் இ. வடிவேலு, பொ. சிவசேகரம் ஆசிரியர் முதலியோர் போன்ற இன்னும் பலர் இப்பணியில் ஈடுபட்டு வந்தது வழக்கமாய் இருந்தது. காலப் போக்கில் நாட்டின் கலவர நிலையால் இப்பணிகள் தடைப்பட்டு விட்டன.

திருக்கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த நகர்வல ஊர்வலம் பல ஆண்டுகளாகப் பிரித்தானிய கடற்படைத் தளத்தின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினராகிய நேவல் பொலிஸ் (Naval Police) நடாத்தி வந்தனர். திருக்கோணமலை பிரித்தானிய தளம் இலங்கை அரசினர் பொறுப்பேற்றதன் நிமித்தம் 1954ம் ஆண்டு தொடக்கம் இந்த ஊர்வலப் பொறுப்பினை ஸ்ரீ முருகன் தொண்டர் சபை ஏற்றது. காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் திருக்கோணேசர் ஆலய பரிபாலனகர்த்தா ஆகிய ந. இ. இராஜவரோதயம் அவர்களின் ஒத்துழைப்புடன் இவ்வருடாந்த நகர்வலம், திருக்கோணேஸ்வர ஆலயம் பூர்த்தியாகி மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற 1968ம் ஆண்டு வரை சிறப்புடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

திருக்கோணேஸ்வர ஆலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருக்கும் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யும் முன்பு நகர் வலம் செய்யப்பட்ட வாய்ப்பு ஸ்ரீ முருகன் தொண்டர் சபைக்குரியது.

திருக்கோணேஸ்வர ஆலயத்தில் நிறுவப்பட்டு இருக்கும் கொடிஸ்தம்பம் திருக்கோணமலை நகர் வாழ் மக்களால் ஆரம்பத்தில் இருந்து (1954) நடைபெற்ற நகர்வலத்தில் உண்டியல் மூலம் சேமிக்கப்பட்ட ஒரு சதம், ஐந்து சதம், பத்து சதம் போன்ற நாணயங்களைக் கொண்ட பணம் மூலம் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையால் உருவாக்கி நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாக்கியம் கொடிஸ்தம்பக் கமலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

திருக்கோணேசர் ஆலயம் புனர் அமைப்புச் செய்ததில் கும்பாபிஷேக வைபவத்தைத் தலைமை வகித்து நடாத்திய பிரதான குருவாகிய பிரம்மஸ்ரீ கைலாயநாதக் குருக்கள் அவர்கள் காலஞ்சென்ற திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி எங்களுக்கு (எனக்கு, வி. சிவஞானம், இ. மகாலிங்கம்) நகர்வலம் சம்பந்தமாகக் கூறிய சில மாற்றங்கள் அமைந்த விதிமுறைகளை இங்கே குறிப்பிடுதல் பொருத்தமாகும். 'கும்பாபிஷேக வைபவம் நிறைவு பெற்றுள்ளதால் அக்கால வரை நடைபெற்று வந்த நகர்வலமும் விதி முறையின் பிரகாரம் நகர் சிறப்படைய ஆண்டுத் திருவிழா முடிந்து மணவாளக் கோலத்துடன் பெருமான் தேவியுடன் எழுந்தருளி நகர்வலம் வந்து அர்த்த சாமத்தின் முன் இருப்பிடம் சேர வேண்டும்' எனக் குறிப்பிட்டார். (அது காலவரை இந் நகரை வலம் வராது இடது புறமாக இவ்வூர் வலம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது). 'அர்த்த சாமத்தின் முன்பு இருப்பிடம் சேர வேண்டும் என்பதற்கு விதிவிலக்காக நாட்டின் பஞ்சம், பிணி, சுமுகம் அற்ற நிலை தோன்றின் நகரின் எல்லா இடங்களுக்கும் நாட் கணக்கில் பெருமானின் ஊர்வலம் அமையலாம் எனவும் அதற்குரிய கிரியைகள் இருப்பிடத்திற்குச் சென்ற பின் செய்யத் தவறக் கூடாது' எனவும் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபை உருவாகி இயங்கி வந்த படியால் மேற்கூறிய விதிமுறைகளின் பிரகாரம் அச் சபையின் அனுமதியுடன் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் இப் பணியைத் தொடர்ந்து நடாத்த சித்தமாயுள்ளோம் எனக் காலஞ் சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு. பா. நேமிநாதன் அவர்களுக்கு விண்ணப்பித்தோம். ஆனால் திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபையினரே இவ் வைபவத்தை நடாத்த முற்பட்டதால் இவ்வூர்வலப் பணி அவ் ஆண்டுடன் (1968) ஊர்வலம் சம்பந்தமான வரவு செலவுக் கணக்குகளைச் செவ்வனே செய்து முடித்துக் கொண்டோம்.

திருக்கோணமலை நகர் வாழ் மக்கள் ஆண்டுதோறும் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடாத்தி வரும் முதலாவது உற்சவத்திற்கு திருக் கோணேச ஆலயத்திற்குச் சேர்ந்த பாபநாச தீர்த்தக் கிணற்றில் இருந்து தீர்த்தம் எடுத்து முறையே கோவிலில் கிருத்தியங்கள் முடிந்த பின் திரு வில்லூன்றிக் கந்தசுவாமி கோவிலில் அன்றிரவு வைத்து மறுநாள் காலையில் திருக்கேதீஸ்வரத்திற்கு மற்றும் அன்பர்களுடன் கொண்டு செல்வது ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் ஓர் பணியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது இப் பணியில் காலஞ்சென்ற டாக்டர் சித்திரவேலு அவர்களின் முக்கிய பங்களிப்புடன் காந்தி மாஸ்டர் அவர்களும் இவ் வைபவத்திற்கு முற்றும் பொறுப்பாக இருந்துள்ளனர்.

திருக்கோணமலை பெரிய தள வைத்தியசாலை முன் அமைந்த 'காந்தி நகர்' மக்களுக்குப் போதனைகள் அறிவுரைகள் சிவானந்த சரஸ்வதி மாதாஜி அவர்களாலும் மற்றவர்களாலும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

நீண்ட கால கலவரத்தின் பின் ஸ்ரீ முருகன் தொண்டர்சபை உறுப்பினர் காலத்திற்குக் காலம் மாறி தற்போது அங்கம் வகிக்கும் உறுப்பினரான திருவாளர்கள் வி. சிவஞானம், ந. செல்வஜோதி, பொ. பத்மநாதன், வ. கனகசபாபதி உட்பட மற்ற அங்கத்தவர்களினது ஒருங்கிணைந்த அயராத பிரயத்தனத்தால் 'முருகன் இல்லம்' சைவ சமய சமுதாய அபிவிருத்திக்குரிய பாவனைகளுக்குப் பொருத்தமான முறையில் நிறுவப்பட்டு பூர்த்தியாகி வருவது அன்பர்கள் அறிந்ததே.

நம் சிறார் உள்ளங்களிலே சத்தியம் என்றால் உண்மை, உண்மை என்றால் கடவுள் என்ற தெய்வ நம்பிக்கையுடன் உயர்ந்த இலட்சியங்களாகிய நீதியும் நேர்மையும் நிறைந்த ஆழ்ந்த நோக்கங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையோடு இணைந்த சமய அறிவுடன் மனித மேம்பாடுகளையும் உணர்த்தும் வகுப்புக்கள் சென்ற குரு பூர்ணிமா தினத்தன்று (18 . 7 . 89) ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினரின் பிரயத்தனத்தால் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலம் வாரந்தோறும் சனிக்கிழமை பி ப 1. 15 தொடக்கம் 3 00 மணி வரை வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்று வருவது வளர்ந்து வரும் இளஞ்சமுதாயத்திற்குச் செய்யும் ஓர் சிறந்த பணியாகும்.

இப்படியான சமுதாய முன்னேற்றத்திற்கு அரும்பாடு படும் இந்த ஸ்தாபனம் மேலோங்கிச் சிறப்புடன் செயற்பட்டு மேன் மேலும் சமுதாய முன்னேற்றத்திற்குச் செயல் புரியச் சகல வல்லமைகளையும் நல்குமாறு முருகப் பெருமானை வேண்டி நிற்கும்,

"துவாரகா"
192, உட்துறைமுகவீதி,
திருக்கோணமலை,
22. 09 . 89.

வே. ஏகாம்பரம்
முன்னாள் செயலாளர் / முன்னாள் தலைவர்
ஸ்ரீ முருகன் தொண்டர்சபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமாற்றம்

—பொ. கந்தையா, (காந்தி மாஸ்டர்)

மனிதனை மனிதனுக்குவது மதம். மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவது மதம். நிலையற்ற உலக விஷயங்களிலிருந்து மனிதனை மீட்டு நிலையான விண்ணுலகப் பெருவாழ்வுக்கு அழைத்துச் செல்வது மதம். மதத்தை ஸ்தாபித்தவர்கள் பெரிய ஞானிகள், கடவுளின் அடியார்கள், கடவுளின் தூதுவர்கள், கடவுளின் அவதாரங்கள். இத்தகைய மதத்தைவிட்டு ஒருவரும் ஓடத்தேவையில்லை. கையில் கற்கண்டை வைத்துக்கொண்டு சீனியைத்தேடி ஏன் ஓடவேண்டும். கற்கண்டும் சீனியும் ஒன்றுதானே!

'பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே' என்பது பாரதி வாக்கு. இதுபோல் நாம் உதித்த மதமும் பெருமதிப்புக்குரியதேயாகும். பணத்துக்கும் படிப்புக்கும், பட்டத்திற்கும், உத்தியோகத்திற்கும், திருமணத்திற்கும், உண்ணும் உணவுக்கும், உடுக்கும் உடைக்கும், உறங்கும் குடிசைக்கும் மதம் மாறும் மக்கள் இருக்கிறுர்கள். இதற்கு மேலும் கொடுத்தால் இன்னுமொரு மதத்திற்கு மாறுவார்கள். இந்த மதமாற்றம் அறியாமையையும் அவர்கள் அஞ்ஞான இருளில் இருப்பதையும் குறிக்கின்றது. இவர்களை அறியாமையிலிருந்து அறிவுடைமைக்கும், இருளில் இருந்து ஒளிக்கும் கொண்டுவரவேண்டும். இருக்கும் மதத்தில் மனப்பக்குவத்தையும் மனமாற்றத்தையும் ஏற்படுத்தவேண்டும்.

மதம் மாறுவதால் ஒரு மனிதன் வாழ்க்கையில் மேம்பாடடைய முடியாது. தன் மதத்தை ஆழ்ந்து ஆராய்ந்து நன்கு படித்து தனது மதகுருவின் வழிகாட்டலில் நம்பிக்கைவைத்து வாழ்ந்தால் மேல்நிலை அடையலாம். எல்லா மதங்களும் ஒரே கடவுளைப் பற்றியும் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையும் வழிமுறைகளைப்பற்றியும் நிறையப்போதிக்கின்றன. அப்படியிருக்க ஒரு மதத்தைவிட்டு இன்னொரு மதத்திற்கு ஏன் மாற வேண்டும்.

பசுக்கள் பலநிறங்களில் இருக்கலாம்; ஆனால் அவற்றின் பால் எல்லாம் ஒரே நிறமாக ஒரே குணமாகவே உள்ளது. அதுபோல் மதங்கள் பல பெயரில் இருந்தாலும் அவை தெரிவிக்கும் உண்மை ஒன்றே. பாலுக்காக கறுத்தப்பசுவை விற்றுவிட்டு வெள்ளைப் பசுவை வாங்குவது அவசியமில்லை. எல்லா மதங்களிலும் உயர்ந்த கருத்துக்கள் இருக்கும் போது மதம் மாற அவசியமில்லை.

பிறரை மதம்மாற்றுவதில் ஈடுபடுவோர் குளிக்கப்போய்ச் சேறு பூசுகிறார்கள். தன் மதத்திலும் ஆயிரக்கணக்கான மக்கள் மதத்தைப் பற்றியோ கடவுளைப்பற்றியோ எவ்வித அறிவும், ஞானமும் இல்லாதவர்களாக இருக்கையில் அவர்களைத் திருத்தி அவர்களுக்குப் போதித்து அவர்களைத் தெய்வத்தன்மைக்கு உயர்த்தாது அவர்களை அஞ்ஞான இருளில் மூழ்கவிட்டு புது ஆட்களை மதத்திற்குச் சேர்க்கப் புறப்படுகிறார்கள். இப்படி மதத்துக்கு எண்ணிக்கையைக் கூட்டுவதால் எவருக்கும் பயன் இல்லை.

மதகுருமார்கள் தம் மதத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு குடும்பத்தையும் அணுகி மதத்தின் உயர்வையும் கடவுளின் மேன்மையையும், மத அறிவினால், மத ஒழுக்கத்தினால் மனிதன் தெய்வமாகலாம் என்ற உண்மையையும் எடுத்து விளக்கி அவனை அஞ்ஞான இருளிலிருந்து ஞான ஒளிக்குக்கொண்டுவந்தால் அதுவே பெரிய சேவையாகும்.

எல்லா மதங்களும் அடிப்படைக் கொள்கைகளைப் புறக்கணித்துவிட்டன. சடங்குகளும், சம்பிரதாயங்களுமே மிஞ்சிக்கிடக்கின்றன. மதக்கொள்கைகள் நல்லவைகள்தான். ஆனால் அவற்றைக் கைக்கொள்ளமுடிவதில்லை என்கிறார்கள். அத்தோடு நாகரிகத்தின் பேரால் வேண்டாத பழக்கங்களையும் பண்பாடற்ற நடையுடை பாவனைகளையும் கட்டித்தழுவும் சமுதாயம் எப்படிக் கடவுளைத்தேட கடவுளை அடையமுடியும்?

புகையிரதம் தண்டவாளத்தைவிட்டு விலகினால் புகையிரதமும் பழுதாகி பிரயாணிகளும் உயிரிழக்க, காயப்பட நேரிடும். அதுபோல் மத ஒழுக்கத்தை மத வாழ்க்கையை விட்டு விலகிய சமுதாயம் தானும் அழிந்து மதத்தையும் அழித்துவிடுகின்றது. ஒவ்வொருவரும் தான்பிறந்த மதத்திலேயே உறுதியாக நிலைபெற்று நின்று அம்மதத்தில் ஈடேற்றப் பாதையினை தெரிந்து கடவுளைச் சென்றடைய வேண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். கடவுளை அடைவதற்கு மதமாற்றம் துணை செய்யாது. சமய குருமார்கள் ஒவ்வொரு மனிதரையும் வேறு சமயத்துக்குச் செல்ல விடாது தன் மதத்தின் சிறப்புக்களை எடுத்துக்கூறி அம்மதத்தில் நம்பிக்கையை உண்டாக்கி பேரின்பமான தெய்வீக நிலைக்கு உயர்த்த வேண்டும்.

நல்லதைச் செய்தால் நல்லதை அடையலாம் என்பதைக் கூறி நம்பிக்கை அற்றவனுக்கும் நம்பிக்கையை ஊட்டி அவனது வாழ்க்கையை பேரின்பமாக்குவதே உண்மை மதத்தின் உயரியகொள்கை. ''மனமது செம்மையானால் மந்திரம் செபிக்கவேண்டாம்'' என்பது பழமொழி. மந்திரத்திலும் மனப்பக்குவமே மேலானது. கடவுளுடைய நாமத்தை, மந்திரத்தை சொல்வதால் மனப்பக்குவம் ஏற்படும். ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்''. எல்லா மதத்திற்கும் இவை பொருந்தும். எனவே மதம்மாறி அலையவேண்டியதில்லை. தன் அயலில் உள்ள கடலில் முத்திருக்கும்போது தூர உள்ள கடலுக்குச் சென்று முத்தைத் தேடவேண்டியதில்லை ''இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை''. கடவுள் எங்கும் இருக்கிறார். எமக்குள்ளேயும் இருக்கிறார். அவரைக் கண்டுகொள்வதே மதம்.

மதமாற்றம் என்பது ஒரு போலிப்புறச்சடங்காகும். அதனால் புறத்தூய்மையோ அகத்தூய்மையோ ஏற்படாது. மதம் மாறிய சிலர் மனதில் ஒரு மதம், வெளியில் ஒரு மதமாக அலைவதைப் பார்க்கிறோம். இரண்டுதோணியில் கால்வைத்தவன் பிரயாணம் என்னவாகும்? நாம் பிறந்திருக்கும் மதத்தில் பொதிந்திருக்கும் உண்மைகளைத் தெரிந்து உயர்நிலையை அடைய முயற்சிப்பதே நமது கடமை. எமது மதத்தில் குற்றம் உண்டு எனவே பிறமதத்தைத் தழுவுவோம் என்று அதில் சேர்ந்து அதிலும் குறைகண்டு வாழ்க்கையை வீணாக்கக்கூடாது. இரண்டு முயல்களைத் துரத்தி ஓடும் வேடன் ஒருவனால் ஒன்றையும் பிடிக்கமுடியாது. அதுபோன்று மதம் மாறியவன் இரு மதத்தையும் இழக்கநேரிடும்.

மதகுருமார்கள் தமது மத ஒழுக்கங்களை தம் மக்களிடையே நடைமுறைப்படுத்தியிருந்தால் மக்கள் இன்றுள்ள அவல நிலைக்குள் அகப்பட்டிருக்கமாட்டார்கள். மதவாழ்க்கைக்கும் இன்று நடப்பவற்றுக்கும் பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. மதவாழ்வு வாழ்பவன் பாவச்செயல்களில் ஈடுபடமாட்டான். இன்று பாவச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மதத்தை கைவிட்டவர்களாக மதத்திலும் இருக்கிறார்கள். மதகுருவிடம் செல்கிறார்கள். ஆலயத்திற்கும் போகிறார்கள். பாவச் செயல்களையும் செய்கிறார்கள். இந்தநிலை மாறவேண்டும். மதத்திலும் அன்றாட வாழ்விலும், அரசியலிலும் நீதி, ஒழுக்கம், உண்மை என்பன கடைப்பிடிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதச்சண்டைகள் நடைபெறுகின்றன. மதம் சண்டைபிடிக்கச் சொல்கின்றதா? சண்டையைத் தூண்டுகிறதா? மதவெறி வேண்டாம். மத அபிமானம் இருக்கலாம். தெய்வம் இகழேல்; ஒன்றிரு தெய்வம் உண்டென்றிரு; எல்லா நதிகளும் ஒரு சமுத்திரத்தை சென்றடைவதுபோல எல்லா மதங்களும் ஓரே கடவுளைச் சென்றடைகின்றன. அப்படியானால் மதச்சண்டைகள் எதற்கு? சமய சமரசத்தையும், சமய ஒற்றுமையையும், சமய சகோதரத்துவத்தையும் அண்மையில் வாழ்ந்து வழிகாட்டிய மகாத்மா காந்தியடிகளும், வடலூர் இராமலிங்க சுவாமிகளும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும், இமயஜோதி சுவாமி சிவானந்த மகரிஷியும், குருமகராஜ் அவர்களும், பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா அவர்களும் இன்னும் பல மகான்களும் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள். ''எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே'' என்றார் தாயுமானார். இப்படி வாழ்ந்தால் மண்ணுலகம் விண்ணுலகமாகும்.

'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ முருகன் தொண்டர் சபை

## சமய வகுப்பு

திரு. வில்லூன்றியம்பதியில் வள்ளி தெய்வானை சமேதராய் திருமலை வாழ் மக்கட்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமான் சந்நிதியில், ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் வெகு காலமாகப் பெரும்பணிகளைச் செய்து வருகின்றனர். முக்கியமாக சமய வகுப்புக்களை நடாத்துவதில் காலத்துக்குக் காலம் பெருமுயற்சி எடுத்து வந்திருக்கின்றனர். காலநிலை, நாட்டின் இடக்கு முடக்குகள் காரணமாய் இவை ஆங்காங்கே தடைப்பட்டு வந்திருக்கின்றன. சபையினரது விடாமுயற்சி காரணமாகவும், தூண்டுதலின் பேரிலும் புனரமைப்பு செய்வது போன்று மீண்டும் கடந்த ஆடித்திங்கள் பதினெட்டாம் நாளில் (18 – 07 – 89) 'குருபூர்ணிமா' தினத்தன்று இச் சந்நிதானத்தில் சமய வகுப்பு ஒன்றினைத் தொடங்கும் வாய்ப்பு அடியேனுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

'ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய், போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்' என்னும் மணிவாசகப் பெருமான் மணிமொழிகளுக்கு ஒப்ப அடியேனை இப்பெரும்பணியில் ஈடுபட இயக்குவித்துவிட்டார் எம்பெருமான். யானும் எனது கணவர் திரு. வே. ஏகாம்பரம் அவர்களும் மிக ஊக்கம் கொண்டு அப் புனித நாளில் கோவில் பூசகராகிய பிரம்மஸ்ரீ பூ. கு. சுந்தரேஸ்வர ஐயர் அவர்கள், திருமலை சைவப் பெரியார்களாகிய பண்டிதர் திரு. இ. வடிவேல் (வடிவேல் மாஸ்டர்), திரு. பொ. கந்தையா ஆசிரியர் (காந்தி மாஸ்டர்), திருமலை ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியின் முந்நாள் செயலாளர் திரு. து. குலவீரசிங்கம் (உ. அ. அ. குச்சவெளி), ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர், கந்தசுவாமி கோயிலடி பெற்றோர்கள் சிலர் பிள்ளைகள் நாற்பத்து இரண்டு, இவர்கள் சமூகத்தில் முருகப்பெருமான் திருவிளக்கேற்றி இச்சமய வகுப்பு தொடங்கப்பட்டது.

இவர்கள் யாவரது ஆசிகளோடு தொடக்கப்பட்ட இவ்வகுப்பு ஸ்ரீமுருகன் தொண்டர்சபை சமயவகுப்பு என்னும் பெயருடன் கோயில் மண்டபத்தில் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் பி. ப 1 . 15 மணியிலிருந்து 3–00 மணிவரை வளர்ந்து வருகிறது. 42 பிள்ளைகளுடன் தொடங்கிய இவ் வகுப்பு, அந்த ஆறுமுகப்பெருமான் கிருபையால் இன்று 186 மாணவர்கள் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை இங்கு குறிப்பிடுவது மிகையாகாது: வயது வாரியாய் 6 - 9 வயது வரை முதலாம் பிரிவும், 10 - 12 வரை இரண்டாம் பிரிவும், 13 இற்கு மேற்பட்டவர்கள் மூன்றும் பிரிவாயும் வகுக்கப்பட்டு சமயக்கல்வி ஊட்டப்படுகிறது. இதற்கு உறுதுணையாக செல்வி பால சரஸ்வதி சண்முகநாதன் (ஆங்கில ஆசிரியை சீனக்குடா), செல்வி பத்மகலா இராமலிங்கம், இளைப்பாறிய ஆசிரியை திருமதி கௌரி பொன்ராசா, திருமதி கெங்காதரன், திரு. ஆ. நவரத்தினம் (B A; Dip in Eng; சேவைக்கால பயிற்சி ஆலோசகர்) ஆகியோர் எனக்கும் எனது கணவருக்கும் உடன் ஒத்துழைப்புத் தர முன்வந்துள்ளனர். அத்துடன் ஸ்ரீ முருகன் தொண்டர் சபைப் பொருளாளர் திரு. பொ. பத்மநாதன் அவர்களும், செயலாளர் திரு. ந. செல்வஜோதி அவர்களும் பெரும் உதவி செய்கின்றனர். சமயபாட வகுப்புப் பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்குமுகமாக தொடக்க வகுப்பிற்கு பென்சில், பேனா, கொப்பிகளை இலவசமாக தி/மாவட்ட இந்து இளைஞர் பேரவையும், திரு. செல்லத்துரை வரதராஜன் (புகைப்படக்கலைஞர்), திரு சிவராசாவும் (வர்த்தகர்) அன்பளிப்புச் செய்தார்கள்.

எமது சிறுர்கள் சமய அறிவினைக் களங்கமற ஓரளவு பெற வேண்டும் என்பதே இவ்வகுப்பினை ஆரம்பித்ததன் முக்கிய நோக்கமாகும். நாட்டின் ஒழுக்க சீலங்கள் திசைதப்பிச் செல்வதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். சமயக் கல்வியானது ஒருவர் வாழ்வினைச் சீர்படுத்தும் ஓர் அறிவெனத் தொன்றுதொட்டு வழங்கப்படும் ஒரு கோட்பாடு. பாடசாலைகளில் போதிக்கப்படும் கல்வியறிவோடு இத்தகைய சமய வகுப்புக்களும் சிறுர்களுக்கு ஒரு ஒழுங்கு முறையான ஆன்மீக வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருக்கும் என்பது வெள்ளிடைமலை.

ஆகவே இச்சமய வகுப்பில், எமது மூதாதையராகிய சமய குரவர்கள் வகுத்தருளித் தந்த தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்னும் பஞ்சதோத்திரங்கள், திருப்புகழ், திருமந்திரம், திருவருட்பயன், உபநிடதம், வள்ளுவர் தந்த திருக்குறள், ஔவைப்பிராட்டி ஈந்தருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறி, நாலடியார், பட்டினத்தார் பாடல் இவற்றைப் பிள்ளைகள் கற்றுணர வேண்டும். பஞ்சசீலப் பண்புகளாகிய சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்னும் வாழ்க்கை முறைகள், பெற்றேர், பெரியோருக்கு மரியாதை செலுத்துதல், கீழ்ப்படிதல், கனம் பண்ணுதல், தெய்வப்பிரீதி, பாபபீதி, சமுதாய நீதி, மௌன மாயிருத்தல், நாமஸ்மரணை பண்ணுதல், மனம் ஒடுக்கம், ஒழுக்கம், கோவில் வழிபாட்டு முறைகள், நடைமுறைகள், சுத்தம், சுற்றுடல் சுகாதார விதிகள், தமது வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டிய நற்பழக்கவழக்கங்கள் இவற்றினை, சமயப் பெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்கள், தத்துவஞானிகள், காந்தியடிகள் போன்றவர்களின் வாழ்க்கை முறைகளைக் கதைகள் மூலம் மாணவருக்கு எடுத்துரைக்கின்றோம்.

தோத்திரங்கள், சுலோகங்கள் முறையே பண்ணுடன் இசைக்கப் பழக்கப்படுகின்றது. சிறார்கள் மிக ஆர்வத்துடன் பங்கு கொள்கின்றனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இவ்வகுப்புக்களில் தாம் கற்றுக் கொள்வதை வாரம்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சாயரெட்சைப் பூசைக்குப் பின், மாணவர்கள் தம்முள் ஒருவரைக் கொண்டு ஒரு சில நிமிடங்கள் கூறுவதை வழிபாட்டுக்கு வருபவர்கள் கண்டும் கேட்டும் இருப்பார்கள். அத்துடன் மாணவர் ஆண், பெண் இருபாலாரும் கோயிலில் நடக்கும் தொண்டுகளில் ஈடுபடுவதையும் காணலாம். கூடிய விரைவில் வெள்ளிககிழமைகளில் சாயரெட்சைப் பூசைக்குமுன் ஒரு கூட்டுப் பிரார்த்தனை ஒழுங்கு செய்யப்பட இருக்கிறது. ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினர் முயற்சியால் நிர்மாணிக்கப்படும் மடம் பூர்த்தியானதும் பௌர்ணமி தினங்களிலும் இப் பிரார்த்தனை, பஜனை நடத்தப்படவிருக்கிறது.

இன்னும் இம்மாணவர் ஆன்மீக வளர்ச்சிக்கு அரும்பாடுபடயாம் எல்லோரும் அடியெடுத்து வைத்துள்ளோம். 'ஆட்டுவிக்க ஒருவருளரேல் ஆடாதார் யாரோ', என்பது போல் முருகப்பெருமான் திருவருளால் ஆசி வழங்கிய பெரியார்கள், பெற்றோர்கள் யாவரது ஆக்கமும் ஊக்கத்துடனும் இக் கைங்காரியம் தொடர்ந்து வளர வேண்டும் என மிக ஆவல் கொண்டுள்ளேன். இதற்கு ஒத்துழைப்புத் தந்து சிறாரை இவ்வகுப்புக்களில் பங்குபெறச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி சுதர்சம்பிகை ஏகாம்பரம்
ஸ்ரீ முருகன் தொண்டர்சபை சமய
வகுப்புப் பொறுப்பாளர்
(இளைப்பாறிய ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றிக் கந்தனின்
# அற்புதத் திருவிளையாடல்கள்

கூறியவர்:- பூரண. தியாகராஜக்குருக்கள் அவர்கள்
தொகுத் தெழுதியவர்:-

**தியாக. கமலராஜ சர்மா, (ரவி) அவர்கள்**
விபுலாநந்த வித்தியாளயம், மட்டக்களப்பு

*[எமது தந்தையரான சிவஸ்ரீ பூரண - தியாகராஜக் குருக்கள் அவர்கள் நேரில்கண்டு அனுபவித்த அற்புத நிகழ்ச்சிகள் பல வற்றில் இரண்டினை அவர் கூறிய மொழிநடையிலேயே தொகுத்து விளக்குவதில் பெருமையடைகிறேன்.]*

அன்று எனக்கு வயது பத்து: யுத்தகாலம். திருகோணமலை ஜப்பான் குண்டுவீச்சுக்கு இலக்கான நாளுக்கு ஒரு மாதத்தின் முன் நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சி. எம் மனதில் பசுமரத் தாணிபோல் பதிந்துள்ளது. நானும் எமது தந்தையார் சிவஸ்ரீபூரணனந்தேஸ்வரக் குருக்களும் மட்டுமே ஆலயத்தில் தங்கி வாழ்ந்த காலப் பகுதி. அரிசிக்கோ பெருந்தட்டுப் பாடு. ஒரு கிழமைக்கு கோயிலுக்குத் தேவையான அரிசியினை அனுமதி (பேர்மிட்) எடுத்து பங்கீட்டரிசி பெற்றுச் சேமித்து வைக்கவேண்டிய நிலைமை; அன்று வார இறுதி. நாளை கடைகளோ பூட்டு! அன்றுமாலைதான் அரிசி முழுவதும் காலியாகிவிட்ட செய்தியினைத் தந்தையாரிடம் கூறினேன். அவர் உரியவேளையில் நான் அறிவிக்காத காரணத்தினால் மிக்க கோபமடைந்து என்னை நன்றாக அடித்து, 'இப்போ நைவேத்யத்திற்கு என்செய்வது!' எனக் கலங்கி ஒன்றும் செய்ய இயலாத நிலையில் வாழைப்பழத்தை வைத்து என்னையே அன்றிரவு பூஜை செய்யும்படி பணித்தார்; இது நிகழ்ந்த இரண்டாம் நாள் காலை தம்பலகாமத்தில் வசிக்கின்றவரும் பல நெற்காணிகளின் உரிமையாளருமான வேலாண் பிரபுவின் மனைவியார், மாட்டு வண்டில் நிறைய வைக்கோல் கற்றைகளுடன், நீராடிப் புனிதமான ஆடை தரித்து திருநீறு பூசிய புனித கோலத்துடன் ஆலயத்திற்கு வந்துசேர்ந்தார். அதனைக் கண்ட எம் தந்தையார் "அம்மா! யுத்தகாலம் என்பதாலும் பராமரிக்க இயலாத காரணத்தினாலும் எங்கள் பசுமாடுகளை விற்றுவிட்டோம். எங்கட்கு வைக்கோல் தேவையில்லையே!" என்றுகூற அம்மையார் சிரித்தவாறே "ஐயா! நேற்று அல்லது முன்தினம் கந்தசுவாமியாருக்கு நைவேத்யம் வைத்தீர்களா?" என வினவினார். தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் 'ஆம்! ஏதோ நைவேத்யம் வைத்து பூஜை நிகழ்ந்தது. எதற்காக இப்புதுமையான கேள்வி' எனக் கேட்டார். அப்போது அம் மூதாட்டி ''நேற்றிரவு நான் ஒரு கனவு கண்டேன்! அதில் நீங்கள் எங்கள் வீடு வந்து ''நீ இங்கே நெல் மூடைகளின்மீது கவலையின்றிப் படுத்திரு, நான் அரிசியின்றிப் பட்டினி கிடக்கின்றேன் எனக் கூறினீர்கள். அது தான் விசாரித்துப்போகவந்தேன்'' எனத் தான் கண்ட கனவினை விபரித்துக் கூறியதுடன் வைக்கோல் கற்றைகளையெல்லாம் அகற்றினார். அப்போது நடுவில் ஒரு மூடை தம்பலகாமத்துப் பச்சை அரிசி காட்சியளித்தது. அந்நாளில் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு அரிசி கொண்டுபோக இயலாத சூழ்நிலை! வழியிலோ கடும் பரிசோதனை! என்பதனால் வைக்கோல் கற்றைகளுக்கு நடுவில் மறைத்து அரிசி கொண்டுவந்துள்ளதாக அம்மையார் கூற, விபரமறிந்த நாங்களும் ஆலயத்துள் பூசைககு வந்துநின்ற அடியார்களும் எம்பெருமானின் அற்புத லீலையை அறிந்து அதிசயப்பட்டோம்.

அன்றொருநாள்! எங்கள் தந்தையாரின் உற்ற நண்பரான திருவாளர் சரவணப் பெருமாள் எனும் அன்பர் வில்லூன்றிக் கந்தன் ஆலயவீதி வழியாக, வெளியூரிலிருந்து வந்த உறவினர்கள் சகிதம் சென்றுகோயிலைப்பார்த்து ''எப்படிக் இக்கோயில்'' என்று வினவ, அவர் ''முன்புஇக்கோயில் நாடோறும் அதிகமான பக்தர் கூட்டத்துடன் மிக்க சிறப்பும் வருமானமும் கூடியிருந்தது. கோணேசர் கோயில் நித்திய பூசனைகளுடன் வளர்ச்சிபெற ஆரம்பித்ததும் (பக்தர்கள் வரவும் பொருள் வரவும் குறைவு என்ற கருத்துப்பட) ''இது வீழ்ந்து விட்டது'' எனக்கூறி வீடு சென்று உறங்கியவேளை, ஓர் கனவு கண்டாராம். அதில் எங்கள் தந்தையாரான பூரணக் குருக்கள் அவர்கள் சிவாச்சார்ய கோலத்தில் சைக்கிளில் சென்ற வேளை முற்றவெளியின் நடுவில் வீழ்ந்து படுத்துக் கிடப்பது போலவும், தற்செயலாக அவ்வழியே வந்த நண்பரான சரவணப் பெருமாள் அவர்கள் 'என்ன குருக்கள் ஐயா! இதுவரை காலத்தில் ஒரு நாளும் முற்றவெளி மைதானத்துக்கு நீங்கள் வந்ததில்லையே! என்ன படுத்திருக்கிறீர்கள்? என்ன நிகழ்ந்தது?' என வினவ, எமது தந்தையார் 'என் செய்வது! நான் இப்போ விழுந்து விட்டேன்' என்று கூறுவது போலவும் கனவு கண்டாராம். மறுநாள் அதிகாலையிலேயே அவர் எங்கள் தந்தையாருக்கு ஏதோ கெடுதி நிகழ்ந்திருக்கவேண்டும் என்ற ஐயத்தில் எங்கள் வீட்டிற்கு ஓடோடி வந்து பார்த்தார். தந்தையார் சுகதேகியாக ஓர் குறையுமற்ற நிலையில் இருப்பதனைக் கண்டு, சந்தோஷமுற்று, தான் இரவு கண்ட கனவினை விபரித்துக் கூறினாராம். அப்போது தந்தையார் நீங்கள் சுந்த சுவாமியாரைப் பற்றி எப்போதாவது ஏதும் குறை நிறை கூறியதுண்டா? என்று கேட்க அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் அவ்வழியே உறவினர்களுடன் சென்றதனையும் அப்போது நிகழ்ந்த உரையாடல்களையும் விபரித்துக் கூறினாராம். அவ்வேளை தந்தையார் 'இதுவும் கந்தனின் திருவிளையாடலே'. கந்தசுவாமியாரோ, கோயிலோ வெளித் தோற்றத்துக்குப் படாடோபமின்றி இருந்தாலும் சிறப்பிலோ பெருமையிலோ ஒரு நாளும் குறையவ மாட்டாது எனச் சொல்லி ஆறுதல் கூறியதனைக் கேட்டு, தனது தவறினை உணர்ந்த அவர், கந்தனுக்குச் சிறந்த முறையில் அபிஷேக பூசைகள் செய்வித்து மகிழ்ந்தாராம். பார்த்தீர்களா! வில்லூன்றிக் கந்தனின் திருவிளையாடல்கள்!

இது போல் எண்ணிலடங்காத அற்புதங்கள் புரிந்து அருளாட்சி புரியும் வில்லூன்றிக் கந்தன் இப்போதும் எப்போதும் திரிகரண சுத்தியுடன் வணங்கும் அடியார்களுக்கு வேண்டிய வரங்களைத் தக்கபடி வழங்கியும், கனவுக் காட்சிகள் மூலம் அருள் புரிந்தும், சூரபன்மன் போல் அகங்காரம் கொண்டவர்களை உரியவாறு தக்கபடி அடக்கிப் புத்தி புகட்டி நல்வழிப்படுத்தியும், அருள் புரியும் பேற்றினை என்னேயென்றுரைப்பது! எனவே நாமும் மனம், மொழி, மெய் எனும் முக்கரண சுத்தியுடன் குறுகிய நோக்கின்றி முருகனை வணங்கி, அவன் அருளால் சகல நலன்களும் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக!

"வில்லூன்றிப் பதியுறை கந்தா போற்றி!
போற்றி போற்றி உன் பொற்பதம் போற்றி
துதி செய் அடியார் துணை நீ அரசே."

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையிலுள்ள

# இந்து நிறுவனங்கள்

## திவ்ய ஜீவன சங்கம் சிவானந்த தபோவனம்

திருக்கோணமலை.

இறைவன் திருவருளும் ஸ்ரீ சற்குரு சிவானந்த மகரிஷியின் நல்லாசியும், மெய்யன்பர்களின் பேருதவியும் துணையாகக்கொண்டு இலங்கையில் திவ்ய ஜீவன சங்கம் உதயமானது.

அவனியில் புற இருளை நீக்க ஆதவன் கிழக்குத் திசையில் உதயமாகின்றான். அதுபோல் இலங்கை மக்களின் அஞ்ஞான இருளை நீக்கி தெய்வீக ஒளியை வீச திவ்யஜீவன சங்கம் இலங்கையின் கிழக்குப் பகுதியில் தெட்சண கைலாசம் எனப்படும் திருகோணமலையில் 1953 ஆம் ஆண்டு உதயமானது.

மாதாஜீ என இலங்கையிலும் தமிழ்நாடெங்கணும் அன்புடன் அழைக்கப்பட்ட சுவாமி சிவானந்த சச்சிதானந்த மாதாஜீ அவர்கள் இமயமலை – ரிஷிகேசம் சுவாமி சிவானந்த மகரிஷி அவர்களிடம் சந்நியாசம் பெற்று இலங்கைக்கு வரும்போது மகரிஷியின் சீடராகிய சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களையும் அழைத்து வந்தார்கள். இருவருமாக திருக்கோணமலையில் திவ்ய ஜீவன சங்கத்தை ஸ்தாபித்து இலங்கை முழுவதிலும் கிளைகளை அமைத்துப் பல பணிகளையும் ஆற்றி வந்தார்கள்.

முன்னாள் தபால், தந்தி மந்திரி திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் 08 – 11 – 1953 இல் சிவானந்த தபோவனத்தைத் திறந்து வைத்தார்கள். உப்புவெளியிலுள்ள இத் தபோவனம் மாதாஜீக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் நிலத்தில் மாதாஜீயின் சொந்தச் செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

தபோவனத்தில் இலவச வைத்தியசாலையும் முக்கிய பணியாக அமைந்தது. இலவச வைத்தியசாலையை சுவாமி இராமதாஸ் அவர்களும், அன்னை கிருஷ்ணாபாய் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

இலவச நூல்நிலையம், கீதை வகுப்பு, ராஜயோக வகுப்பு, ஆசன வகுப்பு, சத்சங்கம், அந்தர் யோகம், சமயபாட வகுப்பு ஆகிய பல பணிகள் இங்கு நடைபெற்றன. வில்லூன்றி ஸ்ரீ முருகன் தொண்டர் சபையிலும் மாதாஜீயும், சுவாமிஜீயும் சமயபாட வகுப்புக்களை நடத்தினர்.

சர்வ மத குருவழிபாடு (குரு பூர்ணிமா தினம்) ஜெயந்தி, நவராத்திரி, சிவராத்திரி ஆகிய விசேட தினங்கள் கொண்டாடப்படும். யாகம், அன்னதானம் முக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிய விழாக்களில் இடம்பெறும் சமயப்பெரியார்களை அழைத்து அவ்வப்போது சமயப் பிரசங்கங்கள் நடத்தப்பட்டன. இலவச வெளியீடுகளும் மலர் வெளியீடுகளும் இடம்பெற்றன.

சிவானந்த தபோவனத்தின் மிக முக்கிய பணி அனாதைக் குழந்தைகளைப் பேணி வளர்த்து கல்வியூட்டி தொழில்காட்டி ஆத்மீகத் துறையில் பயிற்சி கொடுத்து அவர்களைப் பூரண மனிதர்கள் ஆக்குவதாகும். பிள்ளைகளுக்கு நெசவுத் தொழில், தும்புத் தொழில், தையல் வகுப்பு, தோட்ட வேலை, பசு வளர்ப்பு ஆகியவற்றில் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. வயது வந்த பெண்பிள்ளைகளுக்கு திருமணமும் செய்துவைக்கப்பட்டது.

தனது உடல், பொருள், ஆவி முழுவதையும் மக்களுக்காகத் தியாகம் செய்த மாதாஜீ அவர்கள் 01 – 04 – 1978 இல் சமாதியடைந்து விட்டார்கள். சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் அமெரிக்காவில் அறுநூறு ஏக்கர் நிலத்தில் ஆச்சிரமம் அமைத்து பெரிய அளவில் சமயப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட வன்செயல்களில் சிவானந்த தபோவனக் கட்டிடங்கள், பொருட்கள் யாவும் அழிக்கப்பட்டு சூறையாடப்பட்டன. பிள்ளைகள் அகதிகளாகப் புறப்பட்டு சில விடுதிகளில் இருந்து இப்போது நீதிமன்ற வீதி, 99 ஆம் இலக்க இல்லத்தில் இருக்கிறார்கள். சுமார் 55 பிள்ளைகள் இருக்கிறார்கள். மாதாஜீயினால் நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாக்கள் இதனை நடத்தி வருகிறார்கள்.

வன்செயல் பாதிப்பாலும் இடமாற்றத்தாலும் நாட்டின் அமைதியற்ற சூழ்நிலையாலும் பல பணிகள் இடைநிறுத்தப்பட்டன. அரசினர் நிவாரண உதவியாலும், பொதுமக்களினதும் பொது நிறுவனங்களினதும் நன்கொடைகளாலும் பிள்ளைகள் போஷிக்கப்பட்டு வருகிறார்கள். உப்புவெளியில் மறுபடியும் கட்டிடங்களைக் கட்டி அங்கு முன்போல் பணிகளைத் தொடர முயற்சிகள் எடுகப்படுகின்றன.

—பொ. கந்தையா, (காந்தி மாஸ்டர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெக்ஷிணகான சபா, திருக்கோணமலை

## செல்வி. பா. இராஜேஸ்வரி ஞாபக கலாநிலையம்

திருக்கோணமலை தெஷிண கான சபா (சங்கீதப் பாடசாலை) 1947 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை திருக்கோணமலையில் இசை பயில விரும்பும் வசதி குறைவான மாணவர்களுக்காக இலவசமாகத் தன் சேவையைச் செய்து வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

ஸ்தாபகர் செல்வி பாலசுப் பிரமணியம் இராஜேஸ்வரி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இக் கலாநிலையம் கடந்த 1972 ஆம் ஆண்டு அன்னார் மறையும் வரை அன்னாரின் இல்லமாகிய இல. 33, பிரதான வீதியில் நடைபெற்று வந்தது. அதன் பின் அன்னாரின் சகோதரரும், பழைய பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பா. நேமிநாதன் தலைமையில் பழைய மாணவர்களால் நடத்தப்பட்டு வந்தது.

ஆயின் 1981 ஆம் ஆண்டு திரு. பா. நேமிநாதன் அவர்களின் மறைவுக்குப் பின் இல. 33 இல்லத்தின் உரிமை கைமாறியதால் செல்வி பா. இராஜராஜேஸ்வரி அவர்கள் சங்கீதப் பாடசாலைக்கென இல. 12, சாரதா வீதியிலுள்ள காணியில் தற்காலிகத் திருத்தங்களுடன் ஒரு தகரக் கொட்டகையில் வகுப்புக்கள் திருமதி பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம் அவர்களைத் தலைமையாகக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவின் நிர்வாகத்தின் கீழ் பழைய மாணவி செல்வி நகுலேஸ்வரி நற்குணம் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு ஆரம்பமாயின.

அதன் பின் கடந்த ஆண்டு நெதர்லாந்துத் தூதரகம், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் ஒரு புதிய மண்டபம், மலசலகூடம் ஆகியன அமைக்கப்பட்டன. மண்டபம் இன்னும் நீடிக்க இடமுண்டு. இறையருளால் இவ்வாண்டு ஒரு கிணறும் வெட்டிக் கட்டியுள்ளோம்.

சுமார் அறுபது மாணவிகள் இங்கு இசை பயில்கிறார்கள். நான்கு ஆசிரியர்கள் இங்கு சேவையாற்றுகிறார்கள். இந்துசமயக் கலாச்சார அமைச்சின் உதவியுடன் சென்ற ஆண்டு தொடக்கம் எமக்கு வருடாந்த உதவிப் பணமாக ரூபா 10,000/- தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன்படி சென்றஆண்டு ரூபா 10,000/- பெற்றோம். அதையே ஆசிரியர் வேதனமாக மிகவும் குறைந்த வேதனத்தை ஆசிரியர்களுக்கு அளித்து வருகிறோம். இதைவிட வாத்தியங்கள் புதிதாக வாங்குதல், திருத்தல், காவல்காரரின் சம்பளம், பராமரிப்புப் போன்ற செலவினங்களைச் சமாளிப்பது மிகவும் பொறுப்பான காரியமாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றம் திருக்கோணமலை இந்து மகளிர் மன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் ஞாயிறு தோறும் இந்துசமய வகுப்புக்கள் சபா மண்டபத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெறுகிறது. வருடக் கடைசியில் பரிசளிப்பு விழாவும் நடைபெறுகிறது.

சபாவின் சங்கீத மாணவர்கள் கோயில்களின் உற்சவங்களின் போதும், சமய நிறுவனங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் போதும் தமிழ் இலக்கிய விழாக்கள் நடைபெறும் வேளைகளிலும் வேண்டுகோளுக்கமைய இசை நிகழ்ச்சிகள் அளித்தும் சேவை செய்து வருகிறார்கள்.

இன்று திருக்கோணமலையிலும், பிறமாவட்டங்களிலும் இசை கற்பிக்கும் ஆசிரியர்கள் எமது சபாவின் மாணவர்களே என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகிறோம்.

இன்று மட்டக்களப்பு விபுலானந்த இசைக் கழகத்தின் அதிபராக இருப்பவரும், எமது சபாவின் பழைய மாணவியும் ஆசிரியையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் கூறி வைக்கின்றோம்.

**திருமதி பா. நல்லரெட்ணசிங்கம்**
*நிர்வாகக்குழுத் தலைவர்*

## சக்தி நிலையம்; திருக்கோணமலை

அருள்மிகு அன்னை ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோயிலின் வீதியில் வழமையாகக் கூடும் அன்பர்கள் திருவாளர்கள் செல்லத்தம்பி, இராமநாதன், மாணிக்கராசா, சண்முகராசா, சண்முகம், சித்திரவேல், யோகராசா இன்னும் பல அன்பர்கள் ஒன்று கூடி கோயில் திருத்தொண்டுகள் இல்லாத காலங்களில் அவமே பொழுதைப் போக்காது அப்பொழுதைப் பயனடையச் செய்யவும் ஒரு வாசிகசாலை ஒன்று ஆரம்பித்தால் நலமாயிருக்கும் எனக் கருதினர்; அவ் எண்ணத்தைச் செயலுருப்படுத்த கோயிலின் ஆதீன கர்த்தா பிரம்ம ஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்களை அணுகித் தங்கள் விருப்பை அவர்களிடம் எடுத்துக் கூறினார்கள். அவர்களும் அவர்களது நன்னோக்கத்தை உணர்ந்து, அவர்களுக்கு தான் தனது முழு ஆதரவையும் தருவதாகக் கூறியதோடு அப்போது உபயோகமற்று இருந்த காளிகோயில் மடத்தில் ஒரு பகுதியை வாசிகசாலை அமைக்கக் கொடுத்துதவினார்கள். அன்பர்களும் அளப்பரிய மகிழ்ச்சியடைந்து அன்றே அம்மடத்தைத் திருத்திச் செப்பனிட ஆரம்பித்தனர்.

அவர்களது விடாமுயற்சியும், ஊக்கமும் விரைவில் அம்மடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் திருத்திச் செப்பனிட்டு முடித்ததும் 1947 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் அவர்களின் தலைமையில் கூடி அவ்வாசிக சாலைக்கு 'சக்தி நிலையம்' என்னும் பெயரை வைத்து சபாரெத்தினம் கௌரவ செயலாளர் ஆகவும், மற்றும் உப தலைவர், உபசெயலாளர், பொருளாளர், நிலையப் பார்வையாளர் நிர்வாக உறுப்பினர் ஆகியோரைத் தெரிவு செய்து நிலையத்திற்கு என ஒரு உபவிதியும் ஆக்கினர்.

அவ்விதியின்படி இதன் பிரதான நோக்கங்கள் அறிவை வளர்த்தல், சமய வளர்ச்சிக்கு வேண்டியன செய்தல், சமூக சேவையில் ஈடுபடல், பொது மக்களுக்குச் சகல துறைகளிலும் உதவி செய்தல் எனவும், இன்னும் பலவோடு எக்காலமும் காளி கோயில் ஆதீன கர்த்தாவே தலைவராக இருக்கவேண்டும் என்றும், நிலையத்தின் பெயரால் அரசியல் விடயங்களில் எக்காரணம் கொண்டும் பங்கு கொள்ளக் கூடாது என்றும் உபவிதியில் குறிப்பிடப்பட்டு பொதுச் சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அன்றிலிருந்து அன்பர்கள் சோர்வடையாது புத்தகங்களும், பத்திரிகைகளும் சேகரிக்கத் தொடங்கினர். இதற்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படா திருக்க சதம்-/50சந்தாச் செலுத்தி அன்பர்களை அங்கத்தவர்களாகச் சேர்த்தனர்.

அன்றிலிருந்து நாளும்பொழுதும் வளர்ச்சி பெற்று தின, வார, மாதப் பத்திரிகைகள் பதினுறும், சந்தாதாரர்கள் கொண்டு சென்று வாசிக்க ஒரு நூலகமும் உண்டாக்கினர். ஆனால் 1955 இல் அரசியல் தலையீட்டால் மு. மாணிக்கராசா அவர்கள் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து 1956 இல் ச. சின்னத்தம்பி செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டு இன்று வரை அவரே தொடர்ந்து செயலாளராகத் தெரிவு நிலையம் நடைபெறுகின்றது. இப்போ அதன் ஆரம்பகர்த்தாக்கள் பலரும் இறையடி சேர்ந்தனர். தலைவரும் இறையடி சேர்ந்ததால் நிலைய விதியின்படி அவர் புதல்வர் பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் தலைவராக உள்ளார்.

தற்போது நிலையக் கட்டிடம் திருத்த வேலைக்கென மூடப்பட்டதால் நிலையம் தற்காலிகமாக இயங்க ஓர் கட்டிடத்தை பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரக் குருக்கள் தந்துதவியுள்ளார்கள். அதில் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் பெருநோக்கோடு நிலையம் இயங்கி வருகின்றது. இனியும் இடரின்றி இயங்க அன்னை ஸ்ரீ பத்ரகாளி அருள் புரிவாளாக.

**திரு. ச. சின்னத்தம்பி**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின்
புதிய கட்டடத் திறப்புவிழா!
திருமலையில் ஒரு பொன்விழா!!
இந்து மக்களுக்கு ஒரு பெருவிழாவென

வாழ்த்துகின்றேன்!

★ அன்பர் ★

திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கிருஷ்ணு
சைக்கிள் ஸ்ரோர்ஸ்

* எயார் பைக் * லுமாலா பைக்
* ரோமா பைக் * ஹீரோ பைக்

என்னும் சைக்கிள் வகைகளின் ஏஜென்டான
இவர்களிடம்

- சைக்கிள் உபகரணங்கள
- சைக்கிள் டயர்கள்
- சுப்பர் எக்சைட் பந்றரி

என்பனவும் விற்பனைக்குண்டு.

ஸ்ரீ கிருஷ்ணு
சைக்கிள் ஸ்ரோர்ஸ்
266, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின்
புதிய கட்டடத் திறப்புவிழா!
திருமலையில் ஒரு பொன்விழா!!
இந்து மக்களுக்கு ஒரு பெருவிழாவென

வாழ்த்துகின்றேன்!

★ அன்பர் ★

திருக்கோணமலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ கிருஷ்ணு
சைக்கிள் ஸ்ரோர்ஸ்

★ எயார் பைக் ★ லுமாலா பைக்
★ ரோமா பைக் ★ ஹீரோ பைக்

என்னும் சைக்கிள் வகைகளின் ஏஜென்டான
இவர்களிடம்

● சைக்கிள் உபகரணங்கள்
● சைக்கிள் டயர்கள்
● சுப்பர் எக்சைட் பந்றரி

என்பனவும் விற்பனைக்குண்டு.

V

ஸ்ரீ கிருஷ்ணு
சைக்கிள் ஸ்ரோர்ஸ்
266, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழகத்தின் தானைத் தலைவன் அறிஞர் அண்ணா''
திருமலையின் மக்கள் தொண்டன்
J. அன்றூஸ்
மக்களின் தேவை அறிந்து உருவாக்கப்பட்டு,
நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர்கிறது
'அன்றூஸ். J. இன்டஸ்ரீஸ்''
உங்களுக்குத் தேவையான பலவகையான
★ சூட்கேஸ் ★ பேக் வகைகள்
பெற்றுக்கொள்வதற்கும்
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கதிரைகள் மற்றும் தளபாடங்களுக்கும்
குஷன், சீற் கவர் அடித்துக்கொள்வதற்கும்
இன்றே நாடுங்கள்!
அன்றூஸ் J. இன்டஸ்ரீஸ்
276, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலைத் தலைநகரின் புகைப்படத்தேவைகளுக்கு
மங்காப் புகழ்பெற்ற ஒரே ஸ்தாபனம்

# ஸ்ருடியோ ஏஞ்சல்

- கறுப்பு வெள்ளைப் படங்கள்
- கலர்ப்படங்கள்
- பாஸ்போட் படங்கள்

இன்னும் உங்கள் எண்ணம் போல் தெளிவான படங்களைப்
பிடித்துக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

# ஸ்ருடியோ ஏஞ்சல்

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்
காலத்தின் தேவையறிந்து சேவை வழங்கக்
காத்திருக்கிறார்கள்

# ஸ்ருடியோ ஏஞ்சல்

358/1, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஜேஜா ரேடர்ஸ்

319/1, நீதிமன்ற வீதி,
திருக்கோணமலை.

எம்மிடம்

* முழுமைச் சேவைகளின் முன்னோடிகளான
அன்ரன் P. V. C குழாய்கள்,
* ஓடுகள், வாளிகள், கட்டடப் பொருள்கள்,
* இயந்திர உதிரிப் பாகங்கள்,
* பெயின்ட் வகைகள்

என்பன சகாய விலையில் கிடைக்கும்

**உறுதிக்கு உத்தரவாதம்**

**தரம் அறிந்து நாடுவோர் தவறாது நாடவேண்டிய**

ஒரே ஸ்தாபனம்

## அஜேஜா ரேடர்ஸ்

**உங்கள் தேவையே எங்கள் சேவை!**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சண்முக தர்ம ஸ்தாபனம்

திருக்கோணமலை இந்து மக்களின் சமய, கல்வி வளர்ச்சிக்காக இத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக அமரர் சிற்றம்பலம் சண்முகம் பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக அவருடைய துணைவியார் திருமதி தங்கம்மா சண்முகம் பிள்ளை அவர்கள் 1923 ம் ஆண்டு தாய்மொழியாகிய தமிழ்மொழி தழைக்க ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தை நிறுவினார். தாம் தொடங்கிய வித்தியாலய தர்மத்தைத் திருக்கோணமலை இந்து மக்களின் பொதுத் தாபனமாகத் தருமசாதனம் முடித்துத் தமது பேரன் திரு. நா. கிருஷ்ணதாசன் அவர்களைத் தர்மகர்த்தாவாக நியமனம் செய்தார். இவ் வித்தியாலய நிர்வாகப் பொறுப்பினை ஏற்று சிறந்த முறையில் திரு. கிருஷ்ணதாசன் அவர்கள் செயலாற்றி வந்தார்.

1932ம் ஆண்டில் ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் ஆதரவற்ற பிள்ளைகளுக்கான விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 1939ம் ஆண்டில் ஏற்பட்ட இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது இப் பாடசாலை அத்தியாவசியத் தேவைக்குப் பயன்படுத்துவதற்காக மூடப்பட்டது. அப்பொழுது அங்கு இயங்கி வந்த ஆதரவற்ற பிள்ளைகளுக்கான விடுதியும் மூடப்பட்டது. இப் பிள்ளைகளின் நலன் கருதி 1957 ம் ஆண்டு 36, வித்தியாலயம் வீதியில் வீடொன்று வாடகைக்கு எடுத்து திரு. கிருஷ்ணதாசன் அவர்கள் ஆண் பிள்ளைகளைப் பராமரித்து வந்தார். அதே ஆண்டில் ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்குச் ஸ்ரீ சண்முக தர்ம ஸ்தாபனத்துக்குரிய காணியில் அமைந்துள்ள கட்டடத்தில் இல்லமொன்றை ஆரம்பித்தார். மேலும் திருக்கோணமலை இந்து மக்களின் அந்திமக் கிரியைகளை நடாத்துவதற்குப் புண்ணிய வெந்நீரூற்றுக்கள் பொருந்திய கன்னியாவில் கட்டப்பட்ட மடத்தை இத் தர்மஸ்தாபனம் பராமரித்து வருகின்றது.

திருக்கோணமலை மாவட்டத்தில் அனாதைகள், ஆதரவற்ற பிள்ளைகள் அதிகரித்ததினால் அவர்களைப் பராமரிப்பதற்குச் சகல வசதிகளுடன் 1960 ம் ஆண்டு உப்புவெளியில் பெண் பிள்ளைகளுக்கான இல்லமும், 1977ம் ஆண்டு மட்டிக்களியில் ஆண் பிள்ளைகளுக்கான இல்லமும் கட்டப்பட்டது. இக் கட்டடம் அமைத்த செலவில் 50% நிதி சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. வித்தியாலயம் வீதியில் வளர்ந்த பெண் பிள்ளைகளிற்கான இல்லம் தொடர்ந்து நடாத்தப்பட்டு வந்தது.

இத் தர்ம ஸ்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் மூன்று இல்லங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட ஆதரவற்ற பிள்ளைகள் இருக்கின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். இவர்கள் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர். வளர்ந்த பிள்ளைகளுக்கும், கல்வியைத் தொடர முடியாத பிள்ளைகளுக்கும் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொள்வதன் பொருட்டு நெசவு, தையல், தட்டெழுத்து ஆகிய நிலையங்கள் நிறுவி அத்துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டு வந்தன. இங்கு தங்கியிருந்த பிள்ளைகள் பலர் மேற்படிப்பை மேற்கொண்டு பல்கலைக்கழகத்துக்கு அனுமதியைப் பெற்றுப் பட்டப்படிப்பைப் பூர்த்தியாக்கினர். சில பிள்ளைகள் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

1985 ம் ஆண்டு இம் மாவட்டத்தில் ஏற்பட்ட இனப் பிரச்சனை காரணமாக, உப்புவெளியில் அமைந்திருந்த பெண் பிள்ளைகள் இல்லமும், மட்டிக்களியில் அமைந்திருந்த ஆண்பிள்ளைகள் இல்லமும் உடைக்கப்பட்டு எரிக்கப்பட்டன. அங்கிருந்த பிள்ளைகள் அகதிகளாகித் தற்காலிகமாக வித்தியாலயம் வீதியிலுள்ள ஸ்ரீ சண்முக பெண்கள் இல்லத்தில் தங்கியுள்ளனர். கன்னியாவில் அமைந்திருந்த அந்திமக் கிரியைகளுக்கான மடமும் இனக் கலவரத்தின்போது சேதமடைந்துள்ளது. அழிந்து போன இல்லங்களினதும், மடத்தினதும் புனர்நிர்மாணத்துக்கான எது வித உதவியும் அரசாங்கத்தாலோ அல்லது அரசு சார்பற்ற நிறுவனத்தினாலோ வழங்கப்படவில்லை.

நாட்டில் ஏற்பட்ட வன்செயலைத் தொடர்ந்து அனாதை, ஆதரவற்ற நிலைக்குள்ளாகிய பிள்ளைகளை இவ் இல்லத்தில் சேர்க்கும்படி கூறிப் பல விண்ணப்பங்கள் கிடைத்துள்ளமையாலும், தற்போதைய இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவும், நோர்வே தாபனத்தின் நிதியுதவியுடன் சகல வசதிகள் கொண்ட இல்லம் ஒன்று இத்தர்மதாபனத்தினால் கட்டப்படுகிறது. தற்பொழுது இயங்கி வரும் இல்லத்தை இத்தர்மதாபனம், சமூக சேவைத் திணைக்களம், மற்றும் பொதுநல தாபனங்கள் ஆகியவற்றின் நிதியுதவியுடன் சிறந்த முறையில் நிர்வகித்து வருகின்றது.

இத் தர்ம தாபனம் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனம்; இதில் ஏழு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். கடந்த 32 வருடங்களாக இம் மாவட்டத்திலுள்ள அனாதை, ஆதரவற்ற பிள்ளைகளுக்கு இது சரணாலயமாகத் திகழ்கிறது.

**செல்வி. வி. நடராஜா**
*நிர்வாகச் செயலாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மகளிர் மன்றம், திருகோணமலை

திருக்கோணமலை இந்து மகளிர் மன்றம் திருக்கோணமலையில் இந்துசமய ஆக்கப் பணிகளை முன்னேற்றவும் ஆன்மீக அறிவை மேம்படுத்தவும் இந்துசமயத்தின் வளர்ச்சிக்குச் சகல விதத்திலும் உதவ என 30. 11. 67 இல் ஆரம்பிக்கப்பட்டது.

**நோக்கங்கள்:**

1. தமிழ்நாட்டில் இருந்து வரும் சைவப் பெரியார்களை இங்கு அழைத்து அவர்களது கருத்துக்களையும் பேருரைகளையும் யாவரும் கேட்கக்கூடிய வாய்ப்புக்களை அளித்தல்.

2. சைவசமய ஆசாரங்கள் கலாச்சாரங்களை வளர்த்தல்.

3. சமய வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்க வேலைகளைச் செய்தல்.

4. குடும்ப நன்மைக்காகப் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த வேண்டிய சிறு கைத்தொழில்களைக் கூட்டாகச் செய்தல்.

5. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பலவிதத்திலும் ஊக்கமளித்துப் பணி செய்தல்.

இந்த வகையில் கோயில்கள் தோறும் பஜனையும் கூட்டுப் பிரார்த்தனையும் நடாத்தி சமய வளர்ச்சிக்கு 1985 ஆம் ஆண்டு வரை எமது பங்களிப்பை வழங்கியுள்ளோம். சமய வளர்ச்சிக்காக எமது உறுப்பினர் சிலர் பேச்சுக்கள், கருத்துரைகள் கூறியும் எழுதியும் வந்துள்ளார்கள். இந்து சமய மகாநாட்டுக்கு வந்த பெரியார்களை அழைத்து திருக்கோணமலையில் அவர்கள் கருத்துக்களைக் கேட்க ஆக்கப்பட்ட குழுவில் நாமும் சேர்ந்து எமது பங்களிப்பைச் செய்துள்ளோம். சமய வகுப்புக்களை ஞாயிறு தோறும் இந்து இளைஞர் மன்றத்தினரோடு சேர்ந்து நடத்தி வருகிறோம்.

திருக்கேதீஸ்வரத்துக்கு இந்து மகளிர் மன்றத்தினர் ஒரு தலயாத்திரையை மேற்கொண்டு அங்கு கூட்டுப் பிரார்த்தனை நடாத்துகிறோம். இன்னும் பல பணிகளைச் செய்ய இருந்தவேளை நாட்டு நிலைமை எம்மைச் சிறிது காலம் செயலிழக்கச் செய்துவிட்டது. ஆயினும் எமது மன்றம் இன்றும் ஆன்மீகத் தொண்டில் ஈடுபட்டு வருகின்றது என்பதை ஈண்டு குறிப்பிட விரும்புகின்றோம்.

எமது பணி தொடரும். கூடிய விரைவில் திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கிராமங்கள் தோறும் எமது மன்றக் கிளைகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து இளைஞர் மன்றம் திருக்கோணமலை

திருக்கோணமலை இந்து இளைஞர் மன்றம் என்று அழைக்கப்படும் இவ்வமைப்பு 1944 ஆம் ஆண்டு 'இந்து மஹாசபை' என்ற பெயரில் இயங்கிய தாபனத்தின் வழிவந்ததாகும். இச்சபை டாக்டர் பாலேந்திரா அவர்கள் தலைமையில் தோன்றி திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்பில் பெரும் பணியாற்றி வெற்றியும் பெற்றது. [இவ் விபரத்தை தொண்டர் இ. சண்முகராசா மூலம் நாம் அறிந்து கொண்டுள்ளோம்]

1963 ஆம் ஆண்டு இந்து வாலிபர் சங்கம் என்று பெயர் மாற்றம் பெற்று சைவப்பணிகளில் ஈடுபட்டு உழைத்தது. வெளிநாடுகளிலிருந்து இந்துப் பெரியார்களையும் தமிழ் அறிஞர்களையும் அழைத்து வந்து அவர்களது சொற்பொழிவுகளை பல இடங்களிலும் நடத்தி வந்தது. இப்பெரும் பணிகளில் ஈடுபட்டு உழைத்தவர்களில் திரு.வி.பூபாலபிள்ளை J. P. அவர்கள் குறிப்பிடத்தக்க ஒருவராவார். 1968 ஆம் ஆண்டுகளுக்குப் பின் இந்து வாலிபர் சங்கத்தின் நடவடிக்கைகள் பல்வேறு காரணங்களினால் தடைப்பட்டு இருந்தது.

இத்தகைய நிலையைக் கண்ணுற்ற திரு. பா. விஜயநாதன் அவர்களது ஒத்துழைப்புடனும் ஆலோசனையுடனும் 29-02-1969 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று மீண்டும் புனரமைக்கப்பட்டு சங்கத்தின் தலைவராக திரு. ச. ஜெகநாதனும், செயலாளராக திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களும் பொறுப்பேற்றுர்கள். அன்றிலிருந்து இன்று வரை இச்சங்கம் ஆற்றிவரும் சேவைகள் திரு. பா. விஜயநாதனின் பெருமுயற்சியினாலுண்டானதே.

சங்கத்துக்கான பணிமனையை திருக்கோணமலை பா. உ காலஞ்சென்ற திரு. சு. ம. மாணிக்கராசா குடும்பத்துக்குச் சொந்தமான மடத்தடிக் கட்டடத்தை திரு. அ. சிவலோகநாதன் அவர்கள் மனமுவந்து தந்துதவினார். இக்கட்டடத்தில் இந்துஇளைஞர்களுக்கான நூலகம், உள்ளக விளையாட்டரங்கு ஆகியன அமைத்து சமயப் பணிகளோடு விளையாட்டுத் துறையிலும் இளைஞர்களை ஈடுபடுத்தியதில் மன்றம் பெருமை கொள்கின்றது.

1973 ஆம் ஆண்டு இந்து வாலிபர் சங்கங்களின் கூட்டமைப்பின் அகில இலங்கை இந்து வாலிபர் சங்கம் எடுத்த தீர்மானத்தின்படி சங்கம் தன் பெயரை இந்து இளைஞர் மன்றம் என்று மாற்றிக்கொண்டது. கூட்டமைப்பும் 'இலங்கை இந்து இளைஞர் பேரவை' என பெயர் மாற்றம்பெற்றது.

திருக்கோணமலை இந்து இளைஞர் மன்ற பிரதிநிதிகள் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலும் நமது மண்ணினதும் மதத்தினதும் புகழ்பரவச் செய்துள்ளனர்.

1975 ஆம் ஆண்டு மலேஷிய இந்து இளைஞர் பேரவையின் அழைப்பின் பேரில் ந. சந்திரகாந்தன் அவர்கள் மலேஷியா சென்று சொற்பொழிவுகளை நடத்திப் பாராட்டுப் பெற்றுத் திரும்பினார்.

1974 இல் அலகபாத்தில் நடைபெற்ற அகில உலக ஹிந்து மகாநாட்டில் திரு. ஸ்ரீஸ்கந்த ராஜா கலந்துகொண்டு அன்றைய கால கட்டத்தில் இலங்கையில் இந்துமதப் பிரிவினர் மீது ஏற்பட்டுள்ள அழுத்தங்களை விபரித்து மாநாட்டின் கவனத்தை இலங்கை சிறுபான்மை மக்களின் மீது திருப்பினார்.

1977 இல் சர்வதேச வாலிபர் மாற்றுத் திட்டத்தின் கீழ் கே. கே. தயாநிதி கனடா சென்று புதிய சூழலிலும் புதிய மக்களிடமும் எமது கலை கலாச்சார, பண்பாட்டு மேன்மைகளை விளக்கினார். அத்திட்டத்தின் கீழ் இலங்கை வந்த கனேடிய நாட்டு இளைஞர்களையும் யுவதிகளையும் வரவேற்று மன்றம் உபசரித்து அனுப்பியது.

1985 இல் மிகமோசமாகப் பாதிப்படைந்த மன்றம் மீண்டும் 1986 இல் புத்துணர்ச்சி பெற்றது.

இந்துசமய வகுப்பு, சிரமதானம், கூட்டுப்பிரார்த்தனை, இந்துமயான பரிபாலனம் என்பவற்றை சக்திக்கேற்ப சிறிய அளவில் இப்போது மேற்கொண்டு வருகின்றது. மாறிவரும் சூழ்நிலையில் மீண்டும் புதிய சக்தியாக எழுந்து நிற்க மன்றத்தின் பணிமனை புனரமைக்கப்பட வேண்டியது அவசியமாக இருப்பதனால் இப்பொழுது புதிய இரண்டு மாடிகளைக்கொண்ட இந்து இளைஞர் மன்றக் கட்டடத்தைக் கட்டி எழுப்புவதற்கான முயற்சியில் மன்றம் ஈடுபட்டுள்ளது. ரூபா 18 லட்சம் செலவில் நிர்மாணம் செய்யப்படவிருக்கும் இக்கட்டடமானது பிரார்த்தனை அறை, பணிமனை, உள்ளக விளையாட்டரங்கு, பொதுமண்டபம், நூலகம், இந்துகலாச்சார ஆராய்ச்சி நிலையம் என்பவற்றைக் கொண்டதாக நகரத்தின் நுழைவாயிலான மடத்தடியில் வானோங்க எழுந்து நிற்கும் நாளை இந்துக்கள் எதிர்பார்த்து நிற்கிறார்கள். இப்பெரும் பணியில்வடக்கு-கிழக்கு மாகாண அரசும் இந்து பெருமக்களும் எமக்கு உதவுவார்கள் என நம்புகின்றோம்.

இப்பணிமனை கட்டி முடிக்கப்படுமிடத்து மன்றத்தின் பணிகள் மேலும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

**கே. கே. தயாநிதி**
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகானந்த சங்கம்

இச்சங்கம் இற்றைக்கு 63 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட திருக்கோணமலையின் மூத்த சங்கமாகும். இதனை உயர்திரு மு. முருகுப்பிள்ளை (ஆசிரியர்), உயர்திரு ஞானகணேசன், திரு. கே. தம்பிஐயா (சாமியார்), திரு பொ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இவர்களது கூட்டு முயற்சியால் 'திருமுருகானந்த வாசிகசாலை' திருமலைநகர் முதல் கண்ட வாசிகசாலையாக அமைக்கப்பட்டது.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆசியசோதி முடிசூடா மன்னனென உலகம் ஏற்றுக் கொண்ட உத்தமன் நேரு அவர்களும் அவர் தன் அன்பு மகள் இந்திராவும் திருக்கோணமலைக்கு வருகை தந்தபோது அவர்களுக்கு வரவேற்பு மடல் வாசித்தளித்த பெருமைகொண்ட சங்கம். முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளால் சேவை நலன் பாராட்டுப்பெற்ற சங்கம் இது.

சிறிது காலம் தேக்க நிலையில் இருந்த இச்சங்கத்தை மீண்டும் காலஞ்சென்ற திரு. பொ. சபாரட்ணம், காலஞ்சென்ற திரு. சு. செல்லத்துரை தற்போதைய தலைவர் திரு. க. சுந்தசாமி ஆகியோர் அயல் இளைஞர்களின் ஒத்துழைப்புடன் மீண்டும் செயற்படத் தொடக்கி வாசிகசாலையையும் இயக்குகிறார்கள். இப்பகுதி மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு நகரசபையின் வேண்டுகோளையடுத்து இவ்வாசிகசாலை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் நமது நல்நோக்கம் கரைந்துபோக மீண்டும் ஒரு வாசிகசாலையை இச்சங்கம் ஆரம்பித்து அறிவுத் துறைக்கு ஆறுதல் வழங்கியது. இச்சங்கத்தின் சேவையைப் பெற்ற பொது மக்களின் உதவியுடன் இச்சங்கம் தனக்கெனச் சொந்தமான கட்டிடம் ஒன்றை 1971ம் ஆண்டு அமைத்து அதில் தரமான வாசிகசாலை அமைத்து தொடர்ந்து இயங்கி வருகின்றது. இச்சங்கம் அயலிலுள்ள திருமுத்துக்குமார சுவாமி கோயிலுக்கான தொண்டுகளை ஆற்றுவதுடன் இளைஞர்களின் முன்னேற்றத்துக்காக விளையாட்டுக்களையும் ஆரம்பித்திருக்கிறது. 1980ம் ஆண்டு கோவிலின் புனரமைப்பையும், நாட்டின் நிலையையும் கருத்திற்கொண்டு விளையாட்டு இடை நிறுத்தப்பட்டுள்ளது.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

க. சதானந்தஜோதி
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை 1974ம் ஆண்டு வைகாசித் திங்களில் இம் மாவட்டத்தில் இயங்கி வந்த பத்து இந்து இளைஞர் மன்றங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

தனிப்பட்ட எவரும் இவ் வமைப்பில் பிரதிநிதித்துவம் பெற இயலாது. இவ் அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ள இந்து இளைஞர் மன்றங்களின் மூலமே எவரும் இதில் பிரதிநிதித்துவம் பெறலாம். இவ்வாறு உருவாக்கப்பட்ட திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைக்குத் தலைவரான திரு. ச. சுந்தரலிங்கம் அவர்களும் (தம்பலகமம் இந்து இளைஞர் மன்ற ஆரம்பகர்த்தா) மதிப்பார்ந்த பொதுச் செயலாளராக திரு. செ. சிவபாதசுந்தரமும் (திருக்கோணமலை இந்து இளைஞர் மன்ற ஆரம்பகர்த்தாவும் அதன் ஸ்தாபக மதிப்பார்ந்த செயலாளரும்) மதிப்பார்ந்த பொருளாளராகத் திரு. மா. ஜெயராமச்சந்திராவும் (மதிப்பார்ந்த செயலாளர், இந்து இளைஞர் மன்றம், அன்புவழிபுரம்) விளங்குகிறார்கள்.

இன்று இப்பேரவை தான் மட்டும் வளர்ச்சியடையாது, திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பல இந்து நிறுவனங்களினதும், இந்து ஆலயங்களினதும் சிறப்பான வளர்ச்சிக்கு வழிவகைகளை ஏற்படுத்திக்கொண்டே வருகின்றது.

இப்பேரவையின் பல்வேறு வகைப்பட்ட சமய, சமுதாய, பொருளாதார அபிவிருத்திப் பணிகளை அகிலமெங்கும் உள்ளோர் நன்கு அறிவார்கள்.

எல்லாம் வல்ல கோணமாமலைப் பெருமானின் திருவருளால் எவ்விதமான பழிச் சொற்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் இப்பேரவை தலைநிமிர்ந்து நிற்கின்றதென்றால் அது இப்பேரவையின் நிருவாகிகளினதும் தொண்டர்களினதும் திருக்கோணமலைக் கிராமங்களில் சிறப்புடன் செயற்பட்டு வருகின்ற இந்து இளைஞர் மன்றங்களினதும் தன்னலமற்ற தியாக சிந்தையுடன் கூடிய சேவையே காரணமாகும் என்றால் மிகையாகாது.

திருவருள்மிகு விஸ்வநாதப் பெருமானின் திருவருளால் சிவன் ஆலயத்துக்குச் சொந்தமான மகேஸ்வரி மண்டபத்திலும் அதனை அடுத்துள்ள சிறிய கட்டிடங்களிலும் தலைமை அலுவலகத்தைக் கொண்டு இயங்குகின்ற இப்பேரவைக்கு மூதூர் நவரெட்ண மண்டபத்திலும், ஒரு உப அலுவலகம் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ் மூதூர் உப அலுவலகத்தின் தலைவராக திரு. கோ. வீரசிங்கமும் (மல்லிகைத்தீவு இந்து இளைஞர் மன்றம்) மதிப்பார்ந்த செயலாளராகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. வீ. வசந்தகுமாரும் (மூதூர் இந்து இளைஞர் மன்றம்) சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த கால வன்செயல்களால் பல்வேறுவகையான பாதிப்புக்களையும் அடைந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு இப்பேரவை ஆற்றிய சேவைகளையும் தற்போது ஆற்றி வருகின்ற சேவைகளையும் அகில இலங்கையிலுமுள்ள எந்த இந்து நிறுவனமும் ஆற்றவில்லை என்பதைப் பெருமன நிறைவுடன் குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

நாள்தோறும் இருபத்தைந்துக்கும் அதிகமான இந்துக்களும் ஏனைய தமிழர்களும் இப்பேரவையில் வந்து தங்கிச் செல்கின்றார்கள். இவர்களிடம் எவ்விதமான கட்டணமும் நாம் அறவிடுவதில்லை.

இவை மட்டுமா திருக்கோணமலைத் தமிழறிஞர் திரு த. கனகசுந்தரம்பிள்ளை நினைவு நூலகம், அருள்மிகு மாரியம்மன் ஆலய வெள்ளிக்கிழமைக் கூட்டு வழிபாடு, பேரவையின் பல்வேறு வகையான கல்விப்பணிகள், வைத்தியப்பணிகள், சிரமதானப் பணிகள் ஆகியனவும் காலத்திற்கேற்ற இந்துக் கலாச்சாரப் பணிகளும் கருத்தரங்குகளும், மாநாடுகளும் இளைஞர் தலைமைத் தகைமை வழிகாட்டல்களும் வன்செயலில் தாய் தந்தையரை இழந்த குழந்தைகள் பராமரிப்பும் என்றென்றும் நினைவுகூரப்பட உள்ளனவாகும்.

இப் பேரவைக்கெனத் தனியானதொரு தொண்டர் அணியும், இந்துமகளிர் அணியும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்கோணமலையிலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு கிராமத்தில் இப்பேரவையின் தலைமைச் செயலகம் அமையும் நன்னாள் ஈழத்திலுள்ள இந்துக்களுக்கே ஓர் சிறப்பான நாளாக அமையும் என எதிர்பார்க்கிறோம். இன்று இப்பேரவையில் நாற்பது இந்து இளைஞர் மன்றங்கள் உறுப்புரிமை பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தாயினும் இனிய கோணமாமலைப் பெருமான் எம்மை என்றென்றும் வழி நடத்துவாராக.

செ. சிவபாதசுந்தரம்,
பொதுச்செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
சிவ சிவ

''ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே''

## திருக்கோணமலை

# இளைஞர் அருள்நெறி மன்றம்

1955 ஆம் ஆண்டு தைத்திங்களில், திருக்கோணமலையில் அருள்நெறிப் பணிகளுக்கென்ற எண்ணத்துடன் சிவகதி அடைந்துள்ள உயர் திரு. பெ. பொ. சிவசேகரனார் அவர்களின் 'தனசக்தி' என்ற இல்லத்தில் ஏழு இளைஞர்களால் தொடங்கப்பெற்றது; திருக்கோணமலையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமானின் திருவுள்ளத்தின் அருளாசிகளுடன் மன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தை இளைஞர்களது திருவுள்ளங்களில் எழுச்சிபெறச் செய்த பெருமை இப்பொழுது தமிழ் நாடு - கோயாம்புத்தூர் ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன் கலைக்கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிகின்ற திருக்கோணமலை மாவட்டத்தின் திருத்தம்பலகமத்தைத் தமது பிறப்பிடமாகக் கொண்டவராகிய புலவர் உயர் திரு. சி. சத்தியமூர்த்தி எம். ஏ; பி. எச். டி. அவர்களையேசாரும்.

மன்றம் தொடக்கத்தில் திருமதி. க; இராசநாயகம் அவர்களின் தலைமையில் சிலகாலம் பணியாற்றியது. அதன்பின் உயர் திரு. பெ. கணநாதபிள்ளை அவர்கள் தலைவராக இருந்தார். அவர்கள் தமது கடமை காரணமாகக் கொழும்புக்கு மாற்றலாகிச் சென்றபின் உயர்திரு. க. சித்திரவேல் அவர்களின் தலைமையின் கீழ் பணியாற்றியது. இன்று மன்றம் தனக்கென ஒரு அறங்காவலர் குழுவைப் பெற்றுள்ளது. அறங்காவலர் குழுவின் தலைவராக உயர் திரு. ஐ. துரைராஜசிங்கம் (முன்னாள் கல்வி நிர்வாக அதிகாரி) அவர்கள் விளங்குகின்றார். உயர் திரு. அ. நாகேந்திரன் அவர்கள் உதவித் தலைவராகவும் விளங்குகின்றார். உயர்திரு சி. சிவனருள்; உயர் திரு. சி. குழந்தைவேலு ஆகியோர் இணைச்செயலாளர்களாகவும், உயர்திரு. ஜே. எவ். யேசுதாசன் அவர்கள் பொருளாளராகவும், உயர்திரு. இ. கனகரெத்தினம் அவர்கள் நூலகப் பொறுப்பாளராகவும், உயர்திரு. ஜே. எஸ். பத்திநாதர் அவர்கள் மன்றத்தின் பிரதம ஆலோசகராகவும் திரு. இ. சண்முகராசா மன்றத்தின் ஸ்தாபகப் பொறுப்பாளராகவும் விளங்குகின்றார்கள். இந்த அறங்காவலர் குழு அமைக்கப்படவேண்டும் என்ற எண்ணம் 1983 ஆம் ஆண்டு ஆடித் திங்களில் உருவாகியதற்கமையவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றத்தின் எதிர்காலப்பணிகள் சென்ற காலத்தைப் போன்று விரிவான முறையில் நடைபெற வேண்டுமா? அல்லது பணிகளைச் சுருக்கி ஒரு எல்லைக் கோட்டோடு அமைந்துவிளங்குவதா? மன்றம் தொடங்கிய காலம்முதல் இன்று வரை பணிகளால் பயன் என்ன? என்ற கணிப்புக்குட்படுகின்ற போதில், மன்றத்தின் பணிகள் நற்பயன்கள் அளித்ததெனில் சொற்பமே. ஆனால், இந்த நிலையில் மன்றத்தின் பணிகள் வரையறுக்கப்படல் வேண்டும் என்ற எண்ணமே மேலிட்டது. அதற்கொப்ப, மன்றத்தின் பணிகளாக நூலகம் நன்முறையில் அனைவருக்கும் பயன்படும்வகையில் (பண வசூலிப்பு இல்லாமல்) அமைதல் வேண்டும்; மன்றம் தொடங்கிய காலம்முதல் இன்றுவரை நடைபெற்றுவரும் சிறுவர்களுக்குரிய மாலைநேரவகுப்பு நடைபெற வேண்டும். அடுத்து மன்றத்தில் படித்த சிறுவர்கள் இப்பொழுது பட்டதாரி இளைஞர்களாகித் திருக்கோணமலையில் மாணவ இளைஞர்களுக்குக் கல்விப் பணியாற்றுவதற்கென இப்பொழுது மன்றத்தில் தொடங்கப்பெற்றுள்ள உயர்கல்விக்குரிய வகுப்புக்கள் செவ்வனே நடைபெறுவதற்குரிய வசதிகள் அளித்து ஆக்கம் ஊக்கம் நல்கவேண்டும்; மேற்படி இம்மூன்று பணிகளுமே வரையறுக்கப்பட்டுள்ளது. காலப்போக்கில் சிதம்பரம் அருட்பெருஞ்சோதி வள்ளலார் பெருமான் அவர்கள் அறிவுறுத்திய போது ''கடைவிரித்தேன் கொள்வாரில்லை சுருட்டிக்கொண்டேன்'' என்ற நிலைமையைக் கணித்து ஆவனசெய்யும் நற்பணியானது மன்றத்தின் அறங்காவலர் குழுவிடமே ஒப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களின் முடிபு உகந்ததே. ஆனால் அவருக்காகவும் இவருக்காகவும் ஆத்மீகத்தின் தருமநீதி வழிப்படுத்தப்படக்கூடாது. அவரும் இவரும் ஆத்மீகத் தர்மத்திற்குத் தம்மைத் தாமே வழிப்படுத்திக்கொள்ளவேண்டும். இதுதான் எல்லாம் வல்ல இறைவனை நோக்கி மனித ஆன்மாக்கள் அல்லும் பகலும் ஆற்றுகின்ற வழிபாடு என்றதன் உள்நோக்கம். இதற்கொப்பவே மன்றம் அன்றும் இன்றும் என்றும் எண்ணிக்கைக்கு ஒருபோதும் இசைந்து போனது கிடையவே கிடையாது. எண்ணத்துக்கே முதலிடம் அளித்து விளங்கியது. இந்த ஒழுங்கு அடிப்படையில் மன்றத்தின் கொள்கைகளை உண்மை உள்ளன்புடன் ஏற்றுக்கொண்டவர் மிகச் சிலரே. ஆனால் ஏற்றுக்கொள்ளாது ஏற்றுக்கொண்டவர்கள்போன்று பாசாங்கு பண்ணுகிறவர்கள்தான் அதிகப் பெரும்பான்மை என்ற உண்மையை நாம் நன்குணர்ந்து இங்கு குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

மன்றப் பணிகளுள் விளங்குவது திருக்கோணமலை-கண்டிவீதி 6 ஆம் கட்டையில் அமைந்துள்ள கமத்தொழிற்பண்ணை. இப்பண்ணையில்தான் 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட துன்பங்கள் துயரங்கள் அழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின்போது 593 தமிழர்கள் (ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், சிறுமியர்கள், குழந்தைகள்) தஞ்சமடைந்து உயிர்பிழைத்தனர். சுமார் இரண்டரை ஆண்டு காலமாக அங்கு வாழ்ந்திருந்து பின் இடம்பெயர்ந்து தமது இடங்களுக்குச் சென்றனர். இந்நிகழ்வினை நாம் உண்மையான தர்மத்தின் அடிப்படை ஒழுங்கில் அமைத்து நினைத்து சீர்தூக்கிப் பார்க்கின் மன்றத்தின் எண்ணத்துக்கே தலையாய இடமளித்துள்ள உயர் நிலையை அனைவரும் நன்கு உணர்ந்து உண்மையின் விளக்கத்தைப் பெறமுடியும். இத்தகைய செயற்பாடு மன்றத்தினை ஒரு கருவியாக அமைத்து செயற்பட்டருளிய எல்லாம்வல்ல திருச்சிற்றம்பலத்து இறைவனின் திருவருட் பெருங்கருணையை என்னவென்பது? அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற இறைவனின் திருவருளை உச்சிமேற்கொண்டு போற்றி போற்றி வணங்குகின்றோம். மன்றத்தினால் செயற்படுத்தப்பட்ட இப்படியான மனிதாபிமானத்தின் நற்பணியை நமது நாடாளாவிய முறையில் எந்தவொரு அரசியல்வாதியோ அல்லது ஆத்மீகவாதியோ சாதித்திருக்கமுடியுமா?

மன்றத்தின் பணிகளுக்கும் அதன் எண்ணங்களுக்கும் சைவ சமயத்தவர்கள் மட்டுமல்ல, மற்றும் பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத்தவர்களும், ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளனர் என்ற பெருமைக்கு மன்றத்தினர்கள் நன்றிசெலுத்துகின்றார்கள். இப்படியான நற்பணியானது மட்டுமேதான் மன்றத்தின் இதுவரைகாலப் பணிகளுக்கும் கட்டியங்கூறி நிற்கின்றது எனலாம். தர்மநீதியின் அடிச்சுவட்டில் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையினது நற்றிருப்பணிகள் அனைத்தும் சிறந்து விளங்கியருள எல்லாம் வல்ல கோணமாமலை ஐயன் திருவருள் பாவித்தருளுவாராக, என்று பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர் அருள் நெறி மன்றம்,
திருக்கோணமலை. (இலங்கை)

இவ்வண்ணம்
பணிவன்புள்ள அடியேன்,
இ. சண்முகராசா,
மன்றஸ்தாபகர், பொறுப்பாளர்,

தொகுப்பு: நடராஜா செல்வஜோதி
செயலாளர்
ஸ்ரீ முருகன் தொண்டர் சபை,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எமது சபையின் புதிய அலுவலகமும், மடம் கட்டட வேலைகளும் சிறப்புற நிறைவேறுவதற்கு எமக்குத் துணைபுரிந்த வில்லூன்றி வள்ளி, தெய்வயானை சமேத ஷண்முகப்பெருமானின் பாதரவிந்தங்களை சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற அப்பரின் திருவாக்குக்கு இணங்க இப்புதிய கட்டடம் அமைப்பதற்கு எல்லா வகையிலும் எமக்கு உதவிபுரிந்த முருகன் தொண்டர் சபை தனது உளம்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றது. எமது சபை 1952 ஆம் ஆண்டு கோயில் மண்டபத்தில் அமைக்கப்பட்டது. அன்று தொடக்கம் ஆலய திருப்பணிகளிலும், சிரமதான தொண்டுகளிலும், சைவ இளைஞர்களுக்கு சமயக் கல்வியை புகட்டுவதிலும், இந்துசமய வளர்ச்சிக்கு தொண்டர் சபை ஆற்றிய சேவையையும் நீங்கள் அறிவீர்கள்.

எம் பணியை தொடர்ந்து செய்வதற்கும், கந்தசஷ்டி காலத்தில் வரும் முருகன் அடியார்கள் தங்குவதற்கும், அன்னதானம் கொடுப்பதற்கும் இடவசதியில்லாமல் இருந்தது. எமது சபைக்கு ஒரு கட்டடம் அமைப்பதற்கு ஷண்முகப்பெருமானின் திருவருளை வேண்டி நின்றோம். எம் பெருமானின் திருக்கருணையினால் ஆலய மணியகாரர்களினால் எமது சபைக்கு ஒரு இடம் கிடைக்கப்பெற்றது. 1986 ஆம் ஆண்டு இக்கட்டடத்துக்கு அத்திவாரம் இடப்பட்டது. நாட்டில் நிலவிய பயங்கரவாதப் பிரச்சினைகளினால் எமது இக்கட்டட வேலைகள் நடைபெறாமல் போயிற்று. ஆறுமுகப்பெருமானின் அருட்கண் பார்வையினால் இவ்வருடம் (1989) வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியடையப் பெற்றுள்ளது. இத்திறப்பு விழாவை முன்னிட்டு ஒரு மலர் வெளியிட வேண்டுமென சபையினர் ஆலோசித்தனர். ஆனால் காலம் குறுகிய நிலையிலும், போக்குவரத்துப் பிரச்சினைகள், மின்சாரத்தடைகள் இருந்த நிலையிலும் இம் மலரை வெளிக்கொணர முடியுமா என சிந்தித்த பொழுது எனக்கு தயக்கம் வேண்டாம் பணி ஆரம்பிக்கலாம் என ஆலோசனை தந்தவர் எனது மதிப்புக்குரிய பிரம்ம ஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய்-சிவம்) அவர்கள். மலர் சம்பந்தமான எவ்வித அறிவும் அற்று இருந்த எனக்கு முருகப்பெருமானின் உறுதுணையோடு, தோளோடு தோள் நின்று என்னை இயக்கிய கோப்பாய் சிவம் அவர்கட்கு எமது சபையின் சார்பில் நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மலரைச் சிறப்பிக்க அருளுரைகள், ஆசியுரைகள் வழங்கிய ஆன்மீகத் தலைவர்களுக்கும், வாழ்த்துரைகள், சிறப்புக் கட்டுரைகள் கவிதைகள் முதலிய வழங்கிய அறிஞர்களுக்கும், பெரியோர்களுக்கும் திருக்கோணமலையின் இந்து நிறுவனங்களின் வரலாற்றினை தந்துதவிய இந்து சமய நிறுவன நிர்வாகிகளுக்கும் மலர் வெளியீட்டுக்கு தேவையான நிதியினை விளம்பரங்கள் மூலம் எமக்குத் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும், மலர் வெளியிடுவதற்கு வேண்டிய ஆக்கங்களை தட்டெழுத்துப் பிரதியாகவும், கையெழுத்துப் பிரதியாகவும் ஆக்கித்தந்த சகோதரிகள் சுதாதேவி செகராஜசிங்கம் அவர்களுக்கும், செல்வி. கௌசல்யா முருகையா அவர்களுக்கும் செல்வி. தாமரைச்செல்வி வில்வராசா அவர்களுக்கும் எமது பணிவான நன்றியறிதலை மலர்க்குழுவின் சார்பிலும் ஸ்ரீ முருகன் தொண்டர் சபையின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பல தடைகளுக்கு மத்தியிலும் இன்முகத்தோடு எம்மை வரவேற்று இம் மலரைச் சிறப்புற, அழகுற அச்சிட்டு உதவிய நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினருக்கும், உரிய ஆலோசனைகளை வழங்கிய 'அருச்சுனா' பத்திரிகை ஆசிரியர் திரு. வே. வரதசுந்தரம், உதயன் அச்சகமுகாமையாளர் திரு. ந. வித்தியாதரன், மற்றும் அச்சக உதவியாளர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகட்டும். தனித் தனி விதந்தும் நன்றி கூறப்பட்டவர்களன்றி இலை மறை காய் போல் இருந்து பணியாற்றும் பண்பாளர்களுக்கும் நன்றி தெரிவிப்பது எமது கடன்.

ந. செல்வஜோதி
(செயலாளர்)

மலர்க்குழு, ஸ்ரீ முருகன் தொண்டர் சபை,
வில்லூன்றி,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை விழாக்களா!　　　பாடசாலை பரிசளிப்பு விழாக்களா!!

தரமான புத்தகங்களைத் தரமறிந்து தெரிந்திடவும்
சிறுவர்களின் உள்ளத்தைக் கொள்ளை
கொள்ளும் விளையாட்டு உபகரணங்களை
மலிவான விலையில் பெற்றிடவும்
இன்றே விஜயம் செய்து பாருங்கள்

'லக்கி'

114, தபாற்கந்தோர் வீதி,　　　திருக்கோணமலை.

என்ன என்ன தேவைகளோ?
உங்கள் குடும்பத்திற்குத்தேவையான,

- பலசரக்குச் சாமான்கள்
- மின்சார உபகரணங்கள்
- தரமான P. V. C குழாய்வகைகள்
- இயந்திர உதிரிப்பாகங்கள்
- விளையாட்டுப் பொருள்கள்

மற்றும் பெயின்ற் வகைகள் அனைத்திற்கும்

"தர்மா ஸ்ரோர்ஸ்"

261, நீதிமன்ற வீதி,　　　திருக்கோணமலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களகரமான வைபவங்களுக்கும்
மற்றும்
ஏனைய வைபவங்களுக்கும்

* கதிரைகள் * பாய்கள்

* பீங்கான் கிளாஸ் வகைகள்

அழகுக்கு அழகு செய்யும் வெளிநாட்டு

* சோடனைப் பொருட்கள்

முதலான இன்னும் பிறபொருட்களை வாடகைக்குப்
பெற்றுக்கொள்ள திருக்கோணமலையில்
நம்பிக்கை மிகுந்த ஒரே ஸ்தாபனம்

## 'சித்திரா வெடிங் சப்ளை'

132, சுங்க வீதி, திருக்கோணமலை.



உங்கள் வீட்டிற்குத் தேவையான
சகல விதமான மின்சார உபகரணங்களையும்
நியாய விலையில் பெற்றுக் கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

## "சிவாஸ்"

உங்கள் தேவையையறிந்து சேவை வழங்க
காத்திருக்கிறார்கள்

## "சிவாஸ்"

தபாற்கந்தோர் வீதி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ முருகன் தொண்டர் சபைக்கு

எமது நல்வாழ்த்துக்கள்!

# நியூ கோபாலன் கம்பனி

28, கடல்முக வீதி, திருக்கோணமலை.

---

திருக்கோணமலையில் பல ஆண்டுகளாக தன்னிகரில்லாச் சேவையாற்றி மக்கள் நெஞ்சங்களில் நீங்காது நிறைந்திருக்கும்

ஒரே குளிர்பான சிற்றுண்டிச்சாலை

## டில்கா கிறீம் ஹவுஸ்

ஐஸ்கிறீம், சோடாவகைகள், குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகள், இவற்றுடன் திருக்கோணமலையின் வீரகேசரி ஏஜென்சியாகவும் திகழ்கிறது.

# டில்கா கிறீம் ஹவுஸ்

256, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான வகைகளில், மலிவான விலையில்

● பெயின்ற் வகைகள் ● ஆணிகள்

● ஓடுகள் ● எஸ்-லோன் குழாய் வகைகள்

போன்ற கட்டட நிர்மாணத்திற்கு தேவையான சகலவிதமான பொருட்களுக்கும் தம்பால் கவர்ந்து வருகிறது

## மகேஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

52, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.

---

உ
ஓம் சரவணபவ

திருக்கோணமலை நகரில் சைவ யாத்திரீகர்களின்
குறையாக இருந்த யாத்திரீகர்கள் தங்கும்
மடத்தை அமைத்துத் தந்த

## ஸ்ரீ முருகன் தொண்டர் சபைக்கு

எமது அன்பான நன்றியைச் செலுத்துகிறோம்.

## "உமையாள் கபே"

332, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லூன்றியில் சைவத் தொண்டாற்றும்

## ஸ்ரீ முருகன் தொண்டர் சபைக்கு

எமது நல்வாழ்த்துக்கள்

**A**
**V**

## நியூ நிருஷா எலக்றிக்கல்ஸ்

46, கடல்முக வீதி, திருக்கோணமலை.

---

★ சுத்தம்
★ சுவை
★ தரம்

உணவு வகைகளுக்கு நாடுங்கள்

## "ஸ்ரீ முருகன் கபே"

உரிமையாளர்;
மு. கார்த்திகேசு

275, நீதிமன்ற வீதி.
திருக்கோணமலை.

---

புதிய பழைய தமிழ், இந்தி, ஆங்கில திரைப்படப் பாடல்களை
நவீனமுறையில் பதிவுசெய்து கொள்ளவும்,
பதிவுசெய்யப்பட்ட நிகழ்ச்சிக் கசெட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்

## மியாமி றெக்கோடர்ஸ்

77, தபால் நிலைய வீதி, திருக்கோணமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவ நாகரிக நங்கையரே!

உங்கள் எண்ணம் போல்
தங்க நகைகள் தெரிவு செய்ய,

இன்றே விஜயம் செய்யுங்கள்

"அபிராமி நகைமாளிகை"

29/9, காசுக்கடை வீதி, திருக்கோணமலை.

---

அன்பான உபசரிப்புக்கும்,
சுவைமிக்க உணவு வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

'அம்பாள் கபே'

79, தபாற்கந்தோர் வீதி, திருக்கோணமலை.

---

வீட்டுக்குத் தேவையான சகலவித
பலசரக்குச் சாமான்களையும் சில்லறையாக
நியாய விலையில் பெற்றுக் கொள்ள

'ரஞ்சனு ஸ்ரோர்ஸ்'

84, பாத்திமா வீதி, திருக்கோணமலை.

---

பலசரக்குச் சாமான்களையும்,
வாடிக்கையாளரின் தேவையினைப் பூர்த்தி
செய்யும் வகையில் சகலவிதமான
சில்லறைச் சாமான்களையும் பெற்றுக் கொள்ள
நாடுங்கள்

'மல்லிகா ஸ்ரோர்ஸ்'

3/2, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் – ஜெயஜெய
மங்களம் மங்களம் மங்களம்

சங்கரனார் மைந்தருக்குச் சர்வசனரக்ஷகர்க்கு
பங்கயப்பொற்பாதருக்குப் பாலசுப்ரமண்யருக்கு – மங்களம்

ஆறுமுகவேலருக்கு ஆறிரண்டு தோளினர்க்கு
வீறுமயில்வாகனர்க்கு மேலருள்செய் சீலருக்கு – மங்களம்

தெய்வமகனாயகர்க்குச் செல்வவள்ளிகாந்தருக்கு
சைவரைரக்ஷிப்பவர்க்குத் தக்ககருணாலயத்திற்கு – மங்களம்

கோணமலை வில்லூன்றிக்கோயில்வளர் நேயருக்கு
காணவருண்மேவி வளர்கருணா கடாக்ஷருக்கு – மங்களம்.


மங்கள நிகழ்ச்சிகளை நெஞ்சைவிட்டு அகலாவண்ணம்
சிறந்த முறையில் வீடியோப் படம்பிடித்துக் கொள்வதற்கும்,
சிறந்த குளிர்பான வகைகளுக்கும்

தன்னிகரில்லா ஸ்தாபனம்

பரடைஸ் வீடியோ கிளப்

132/A, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org